Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 11 புதன்கிழமை (27.07.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 301

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT


RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/797)




கூட்டமைப்பின் வெற்றி சம்பிக்கவின் விளக்கம் (03)



தீர்ப்பை புரிந்து கொள்ள வேண்டும் (14)



விக்டோரியாவுக்கு எதிராக சிறப்பான ஆட்டம் (08)



சிக்கியது சி.ஐ.ஏ (04)

## ஈ.பி.டி.பி. ஆதரவாளர் மீது தாக்குதல்

## தெல்லிப்பளையில் கூட்டமைப்பினர் கைவரிசை



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கான உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சஜீவன் என்பவர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர் குழு ஒன்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளரான சந்திரபாலன் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

நேற்று இடம்பெற்ற தாக்குதலின் போது பன்னாலையில் அமைந்துள்ள சந்திரபாலனின் வர்த்தக நிலையமும் தாக்கி உடைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள சஜீவன் என்பவரின் தலைமையில் மோகனாத் என்பவர் உட்பட மூவர் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர் குழுவினரே (15 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பாடசாலைகளை கண்காணிக்க ஏற்பாடு

(அச்சுவேலி)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட நிர்வாகப் பிரிவின் கீழ் உள்ளடக்கப்படும் தனியார் பாடசாலைகளிற்கும் இவ்வருடம் முதல் வலயமட்ட தரிசிப்புக் குழுவின் தரிசிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுமென கல்வித் திணைக்களம் தெரிவிக்கிறது.

இவ்வருடம் முதல் தனியார் பாடசாலைகள் என்ற வேறுபாடின்றி அனைத்து பாடசாலைகளிற்கும் வலயமட்ட தரிசிப்புக் குழுவின் தரிசிப்பு நடவடிக்கைகள் உரிய முறையில் இடம்பெறும். மேற்படி பாடசாலைகளுக்கான தரிசிப்பு நடவடிக்கைகள் தொடர்பான தினங்கள் தொடர்பாக அப்பாடசாலைகளுக்கும் உரிய முறையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (03)


## யாழ். புற்றுநோயாளர் விடுதிக்கு இன்று அடிக்கல்


(யாழ்ப்பாணம்)

யாழ். புற்றுநோய் வைத்தியசாலைக்கான நோயாளர் விடுதிக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இன்று மாலை தெல்லிப்பளையில் இடம்பெறவுள்ளது.

மாத்தறை தெய்வேந்திர முனையில் இருந்து நடைபாதையாகப் புறப்பட்ட குழுவினர் நேற்றுப் பகல் யாழ்ப்பாணம் வல்லைவெளியை அடைந்துள்ளார்கள்.

பருத்தித்துறை வெளிச்சவீடு வரையான பயணத்தை மேற்கொண்டு 200 மில்லியன் ரூபாவை திரட்டுவது இந்த நடைபாதைப் பயணத்தின் நோக்கமாகும். இது வரையில் இவர்கள் தமது இலக்கில் (15 ஆம் பக்கம் பார்க்க)





## காணி, பொலிஸ் அதிகாரமில்லாத அரசியல் தீர்வு சாத்தியமற்றது

(கொழும்பு)

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பகிராமல் வடக்கில் இறுதியான அமைதி, நீதி மற்றும் ஜனநாயகத்தைக் கொண்டு வருவதும், அரசியல் தீர்வொன்றை அடைவதும் சாத்தியமற்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் வெற்றியின் தாக்கத்தை புரிந்துகொண்டதோ இல்லையோ தமிழ் சமூகத்தின் அபிலாசைகளையும் அவர்களின் உண்மையான பிரச்சிகைளையும் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை என்பது துரதிஷ்டமே என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் என்பனவற்றை பகிர்ந்து கொள்ளமுடியாது. அவை பேச்சுக்களுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் என்ற இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிட்டுள்ள சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்த இரண்டுமே நீடித்த அமைதி, நீதி, ஜனநாயகம் மற்றும் வடக்கின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானவை என்று குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைப் பகிரமுடியாது என்று இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் பிடிவாதமாக இருந்தால் தற்போதைய பேச்சுக்கள் தொடரும் என்று எதிர்பார்க்கக் கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு கண்ணியமான தீர்வு ஒன்றை காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றும் தயாராகவே உள்ளது என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

## புதிய பாடத்திட்டத்தின் படி உயர்தரப் பரீட்சைகள்

இவ்வருடம் இடம்பெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் புதிய பாடத்திட்டத்திற்கமைவாகவே இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இப்பரீட்சை தொடர்பாக புதிய பாடத்திட்டத்திற்கமைய மாதிரி வினாத்தாள் எவ்வாறு அமையக்கூடும் என்பது பற்றிய விளக்கங்கள் மாதிரி வினாத்தாள்கள் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், வினாத்தாள்களின் கட்டமைப்புக்கள் எவ்வாறு அமையக்கூடும் என்பது பற்றியும் மாணவர்கள் அறிந்திருக்கக்கூடிய வகையில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (03)

## தந்தை செல்வாவின் தனயர்களின் வெற்றி

(கொழும்பு)

தலைவர்கள் தவறிழைத்தாலும் தமிழ் மக்கள் தவறிழைக்க மாட்டார்கள் என்று 1949 இல் தந்தை செல்வா அவர்கள் தீர்க்க தரிசனமாகக் கூறிய கூற்று இன்று நிதர்சனமாகி விட்டது. இவ்வுரிமைப் போராட்டத்தில் தந்தையும் அவரோடு இணைந்த தளபதிகளும், தனயர்களும் செய்த தியாகம் வீண் போகவில்லை என்பதையும் இன்றும் மக்கள் அவற்றை மறக்கவில்லை என்பதையும் இம்முடிவுகள் துலாம்பரப்படுத்தியுள்ளன.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுதந்திரத்தின் பின்னர் மாறி மாறி வந்த அரசுகளால் தட்டிக் கழிக்கப்பட்ட அரசியல் தீர்வின் அவசியத்தை இம்முடிவுகள் சர்வதேசத்தின் பார்வைக்கு வைத்துள்ளன. இம்முடிவுகள் இனப்பிரச்சினையின் மூலகாரணத்தை நன்கு உணர்ந்து சர்வதேச (15 ஆம் பக்கம் பார்க்க)

## குடத்தனையில் வலம்புரிச் சங்கு

(யாழ்ப்பாணம்)

குடத்தனை கடற்பரப்பில் மீனவர்கள் நேற்றுக்காலை வலம்புரிச் சங்கு ஒன்றைப் பிடித்துள்ளனர்.

தென்னிலங்கையில் இருந்து வந்து கடலட்டை பிடிப்பதில் ஈடுபட்டவர்களுக்கே இவ் அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது. (18)

## என்னதான் சொல்கிறார்கள்?



"தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்ததன் மூலம் அரசுக்கு எதிரான யுத்தக் குற்ற விசாரணை அவசியம் என்பதை தெரிவித்திருக்கிறார்கள்."

– சுரேஷ் (தினக்குரல் 26.07.2011)



"வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஏகோபித்து அளித்துள்ள தீர்ப்புக்கு மதிப்பளித்து, அரசியல் தீர்வுக்கு அரசு துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்."

– மாவை சேனாதிராசா (உதயன் 26.07.2011)

**இந்த அரசாங்கத்துடன் அரசியல் தீர்வுக்குப் பேச முடியும் என்கிறார்களா? அல்லது இந்த அரசாங்கத்தை சர்வதேச நீதிமன்றில் தண்டித்து விட்டு வேறு யாருடனும் பேசலாம் என்கிறார்களா? அல்லது தமிழ் மக்களுக்கு ஐ.நா.விடம் பேசித் தீர்வை எடுத்துத் தரப் போவதாகச் சொல்கிறார்களா? இழவு... ஒன்றும் விளங்கமாட்டேன் என்கிறதே!**



# வடபகுதித் துறைமுகங்களைப் புனரமைக்க அரசு அதீத அக்கறையுடன் செயற்படும்

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ



(காங்கேசன்துறை)

வடக்கில் உள்ள துறைமுகங்களைப் புனரமைப்பதில் அரசு மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டுவருவதாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

காங்கேசன்துறை துறைமுகப் பணிகள் நேற்று ஆரம்பித்து வைகக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தம் நடைபெற்ற காலங்களில் ஏ - 9 வீதி பூட்டப்பட்டிருந்த நிலையில் யாழ்.மக்களுக்காக அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகத்தை இத்துறை முகத்தினூடாகவே நாம் மேற்கொண்டு வந்தோம். இதற்கு கடற்படையினர் அரசாங்கத்திற்குப் பூரணமான ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறினார்.

இந்திய அரசினால் இத்துறைமுகம் புனரமைக்கப்படுவதன் மூலம் இலங்கைக்கும் இந்தியாவிற்குமான உறவுகள் பலப்படுத்தப்படுவதுடன் வர்த்தக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் வளர்ச்சி காண்பதற்கு உதவும்.

அரசாங்கம் தற்போது நாட்டிலுள்ள துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதில் அதிக அக்கறை காட்டி செயற்பட்டு வருகிறது. இந்நிலையில் வடபகுதியில் உள்ள 2 அல்லது 3 துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதில் நாம் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறோம் என்றும் கூறினார்.

# அச்சுவேலியில் வீட்டுத்தோட்டம் படையினர் ஊக்குவிப்பு

வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையினை ஒவ்வொரு வீடுதோறும் மேற்கொள்வதற்கு ஏதுவான முறையில் அச்சுவேலிப் பிரதேசத்தில் இராணுவத்தினர் பொது மக்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.

வீட்டுத்தோட்டச் செய்கை மூலம் மரக்கறிப் பயிர்களைப் பயிரிடுவதற்காகத் தோட்ட நிலத்தினைப் பண்படுத்துதல், மரக்கறிப் பயிர் விதைகள் வழங்குதல் போன்ற பல்வேறு உதவிகளையும் வழங்குவதற்கும் இராணுவத்தினர் முன்வந்திருப்பதால் மேற்படி வீட்டுத் தோட்டச் செய்கையில் பொதுமக்களும் கூடுதல் நாட்டம் கொள்ளத் தொடங்கியுள்ளனர். இராணுவத்தினரின் பெருமளவான வரவேற்புக் கிடைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (03)

# முன்பள்ளிக்கு நிரந்தரக் கட்டடமில்லை உயிலங்குளம் சிறார்கள் சிரமம்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் உயிலங்குளம் கிராமத்தில் இயங்கும் முன்பள்ளி நிரந்தரக் கட்டடம் இன்றிப் பொது நோக்கு மண்டபத்தில் தற்போது இயங்கிவருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பல்வேறு செயற்பாடுகள் இடம்பெறும் பொதுநோக்கு மண்டபத்தில் மாணவர்கள் பெரும் இடையூறுகளின் மத்தியில் கல்வி கற்றுவருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டால், முன்பள்ளி மாணவர்கள் சிரமமின்றித் தமது, கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். எனவே இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறு இப்பிரதேச மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.(121)

# பாலிநகர் ம.வி.க்கு விஞ்ஞான ஆய்வுகூடம்

(அப்பலப்பெருமாள்)

துணுக்காய் பாலிநகர் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் திருமுருகண்டி இந்து வித்தியாலயத்தில் இருமாடிக் கட்டட வேலைகள் நடைபெற்று வருவதாகவும் ஒட்டுசுட்டான் இந்து ஆரம்ப வித்தியாலயத்திலும் கட்டடத்திற்கான வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார். (121)

# யாழில் புதிய வீதி அமைப்பு நகர முதல்வர் திறந்து வைத்தார்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்தியூஸ் வீதியிலிருந்து பிரிந்து செல்லும் ஒழுங்கை ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு அதற்கு அல்வின் ஒழுங்கை என் பெயர் சூட்டி நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரும் யாழ்.நகரசபை உறுப்பினருமான எஸ்.விஜயகாந்தின் 2010 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து புதிதாக அமைககப்பட்ட மேற்படி ஒழுங்கையை யாழ்மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் கிறின் கிங்ஸ் சனசமூக நிலையத் தலைவர், நிர்வாகிகள், ஜே/ 75 கிராம மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவி மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்.கிறீன் கிங்ஸ் சனசமூக நிலைய ஸ்தாபகரும் சுமார் 17 வருடகாலமாக சனசமூக நிலையத் தலைவரும், கிறீன்கிங்ஸ் கலை பிரிவின் ஸ்தாபகராகவும் விளங்கிய அல்வின் என்பவரின் ஞாபகார்த்தமாக இவ் ஒழுங்கைக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளி.மாவட்ட செயலகம் புனரமைப்பு துரிதம்

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் இரண்டு கட்டடங்களுக்கான புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த இரண்டு கட்டட வேலைகளுக்குமென 2.5 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

கிளிநொச்சி அரச அதிபரின் தற்காலிக விடுதியும் காவலாளி அறை மற்றும் வாகனத் தரிப்பிடம் 1.71 மில்லியன் ரூபா செலவிலும், பிறப்பு இறப்புக் காரியாலயத்தின் வரவேற்பு மண்டபம் 0.34 மில்லியன் ரூபாசெலவிலும் நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைக் கிளிநொச்சி அரச அதிபர் மேற்கொண்டு வருகின்றார். (100)

# யாழ்.சோமசுந்தரம் வீதி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சோமசுந்தரம் வீதி, தற்போது கற்கள் பரப்பப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகிறது.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுவரும் நிலையில் நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாத இவ்வீதியும் தற்போது யாழ்.மாநகர சபையினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் பெறப்பட்ட நிதியுதவியுடன் இவ்வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வீதியிலிருந்து 600 அடி நீளமான குறிப்பாக ரயில் கடவை வரை இவ்வீதி புனரமைக்கப்படவுள்ளது. சுண்ணாம்புக் கற்கள் கொண்டு புனரமைக்கப்படும் வீதிகள் நீண்டகாலத்திற்குப் பயன்படுத்த முடியாது விரைவில் சேதமடைவதால் இவ்வீதி கருங்கற்களால் புனரமைக்கப்படுவதாகவும் வழங்கப்பட்ட நிதிக்கேற்றவாறே குறிப்பிட்ட தூரம் வரை இவ்வீதி புனரமைக்கப்படுவதாகத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வ.அரியபுத்திரன் தெரிவித்தார். (எஸ்)

# மரக்கறி விலையில் வீழ்ச்சி



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலும் உள்ளூர் மரக்கறி வகைகளின் விலை திடீரென வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார் மடம் போன்ற சந்தைகளில் இந்த மரக்கறி வகைகள் கூடுதலாக வந்து சேர்ந்ததால் அவற்றின் விலைகள் வீழ்ச்சியுற்றுள்ளன.

அதே சமயம் தம்புள்ளையில் இருந்தும் சில மரக்கறி வகைகள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படுகின்றமையும் இவற்றின் விலை வீழ்ச்சிக்குக் காரணம் என்று சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றைய சந்தை நிலவரப்படி கத்தரிக்காய் கிலோ 40 ரூபாயாகவும், பூசனிக்காய் கிலோ 30 ரூபாயாகவும், தக்காளிப்பழம் கிலோ 60 ரூபாயாகவும், பயிற்றை கிலோ 60 ரூபாயாகவும், கோவா கிலோ 50 ரூபாயாகவும், கரட் கிலோ 60 ரூபாயாகவும், முருங்கைக்காய் கிலோ 90 ரூபாயாகவும், கீரை ஒரு பிடி 15 ரூபாயாகவும், பச்சைமிளகாய் கிலோ 60 ரூபாயாகவும், வெங்காயம் கிலோ 70 ரூபாயாகவும் விற்கப்பட்டது. (வி)

# ஆறுகால் மடத்தில் வீதி விபத்து

(ஆனைக்கோட்டை)

ஆறுகால் மடப் பகுதியில் மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று மதியம் 12 மணியளவில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் கோண்டாவிலைச் சேர்ந்த வி.வினேசன் (வயது 23) என்பவரே படுகாயமடைந்த நியைில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் ஆறுகால் மடம் நோக்கிப் பயணித்துக்கொண்ருக்கும் போது மோட்டார் சைக்கிள் பிரேக பிடிக்க முடியாமல் மின் கம்பத்துடன் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. (எஸ்)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சை – 2009

**இசைமாணி (2 ஆம், 3 ஆம் மற்றும் 4 ஆம் வருடப் பரீட்சைகள்)**

**நடனமாணி (1 ஆம், 2 ஆம், 3 ஆம் மற்றும் 4 ஆம் வருடப் பரீட்சைகள்)**

மேற்படி இசைமாணி மற்றும் நடனமாணி பட்டக் கற்கை நெறிகளுக்கான பிற்போடப்பட்ட பரீட்சைகளை எதிர்வரும் 15.08.2011 (திங்கட்கிழமை) தொடக்கம் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| நடனமாணி – முதலாம் வருடத் தேர்வு<br>இசைமாணி / நடனமாணி – மூன்றாம் வருடத் தேர்வு | 15.08.2011 – 18.08.2011 |
| இசைமாணி / நடனமாணி – இரண்டாம் வருடத் தேர்வு<br>இசைமாணி / நடனமாணி – நான்காம் வருடத் தேர்வு | 19.08.2011 – 23.08.2011 |

பரீட்சை தொடர்பான புதிய நேர அட்டவணைகளை வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 - 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்,
25.07.2011

(C/549)

உலகில் மூன்று வகையான மக்கள் இருக்கின்றனர். செய்ய முடியும் என்பவர் செய்யமாட்டோம் என்பவர், செய்ய இயலாது என்பவர். முதலாமவர் எல்லாவற்றையும் செய்து முடிக்கின்றனர். இரண்டாமவர் எதிர்க்கின்றனர், மூன்றாமவர் எவற்றிலும் தோல்வியடைகின்றன. -அனுபவசாலி-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## புற்றுநோய் - நடைபவனி

யாழ்ப்பாணத்தில் சிறுவர்களுக்கான புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை அமைப்பதற்காக மாத்துறை தெய்வேந்திர முனையிலிருந்து பேதுரு முனையான பருத்தித்துறை வெளிச்சவீடு வரையான கால்நடைப் பயணத்தை மேற்கொண்டிருந்த குழுவினர், நாட்டின் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறுவர்க்கான புற்றுநோய் வைத்தியசாலையை அமைப்பதற்காக 200 மில்லியன் ரூபாவைத் திரட்டுவது இந்த நடைபவனியின் நோக்கமாகும். இதுவரையில் இவர்கள் 130 மில்லியன் ரூபா வரையில் திரட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹேல ஜயவர்த்தன, குமார் சங்கக்கார போன்ற கிரிக்கெட் வீரர்கள் இந்த நிதி சேகரிப்புக்கு ஆதரவு தெரிவித்து உதவியுள்ளார்கள். குமார் சங்கக்கார யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வரை நடைபவனியோடு சென்றிருக்கிறார். இன்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இந்த நடைபவனி நிதி சேகரிப்புக் குழுவினர் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். மாலை 4 மணிக்கு தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையில் விடுதி அமைப்பதற்கான அத்திவாரம் இடப்படும் நிகழ்வு நடைபெறுகிறது.

கொழும்பில் மகரகமவில் புற்றுநோய் சிகிச்சைக்கான பெருமளவு வசதிகள் கொண்ட வைத்தியசாலை இருக்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்தும் நோயாளர்கள் அங்கு சென்றே சிகிச்சை மேற்கொள்கிறார்கள். யாழ்ப்பாணத்திலும் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்று நவீன வசதிகளுடன் அமைவது, இங்குள்ள மக்களின் மருத்துவ சிரமங்களைப் பெருமளவில் குறைக்கும்.

இன்றைய காலகட்டத்தில் மனிதர்களின் இறப்புக்கான முதன்மைக் காரணங்களில் ஒன்றாக உள்ளது புற்றுநோய். மனிதர்களை மட்டுமல்லாது எல்லா விலங்குகளையும் தாக்கக் கூடியது இந்நோய்.

உடலில் கட்டுப்பாடற்று கலங்கள் பிரிந்து பெருகுவதால் ஏற்படும் நோய் இது. இந்தக் கலங்கள் பிரிந்து பரவி மற்றத் தசைகளையும் தாக்குகின்றன. நோய் முதிர்ச்சியடைந்த நிலையில் இந்த புற்றுக்கலங்கள் குருதியின் வழியாகப் பரவுகின்றன. புற்றுநோய் எந்த வயதினரையும் தாக்கும் என்றாலும் வயது கூடக் கூட தாக்கும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

புற்றுநோயால் சுமார் 13 வீதமான மனித இன இழப்பு ஏற்பட்டு வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்கன் கான்சர் சமூகம் நடத்திய கணிப்பின்படி 2007 ஆம் ஆண்டில் மட்டும் 7.6 மில்லியன் மக்கள் புற்றுநோயால் இறந்திருக்கிறார்கள்.

கலங்களின் வளர்ச்சி மற்றும் இறப்பினைக் கட்டுப்படுத்தும் மரபணுக்களில் ஏற்படும் மாற்றத்தால்தான் புற்றுநோய் உண்டாகிறது. புகைப்பழக்கம், சில உணவுகள், சூரியனிலிருந்து வெளிபடும் புற ஊதாக் கதிர்கள், புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய கதிர் வீச்சுள்ள வேலைத்தளங்களில் சம்பந்தப்படுவதனாலும் இந்த மரபணு மாற்றங்கள் ஏற்படுகிறது.

புற்றுநோயிலிருந்து தற்பாதுகாத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாகப் பின்வருவன குறிப்பிடப்படுகின்றன. புகையிலையை எந்தவிதத்திலும் பயன்படுத்தக்கூடாது. கொழுப்பு உணவுகளைக் குறைத்து அதிகளவில் காய்கறிகள், பழங்கள், முழு தானிய வகைகளை உட்கொள்ளுதல், முறையான உடற்பயிற்சி என்பவையே அவை.


புற்றுநோய் ஆரம்பக் கட்டத்தில் வலியை ஏற்படுத்துவ தில்லை. எனவே இதை நோயாளி கண்டுபிடிப்பதில் தாமதம் ஏற்படும் வாய்ப்புண்டு. புற்று வளர்ந்து எலும்புகள், உறுப்புகள், நரம்புகளை அழுத்தும்போதே வலி ஏற்படுகிறது.

இன்று பெருமளவில் மரணங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் புற்றுநோயின் சிகிச்சைக்கென யாழ்ப்பாணத்திலும் வைத்தியசாலை அமைவது பாராட்டுக்குரியது. அதற்கான முயற்சிகளையும், நிதி சேகரிப்பையும் மேற்கொண்டிருக்கும் நடைபவனி குழுவினர் பாராட்டுக்குரியவர்கள்.

- ஆசிரியர்.

# கூட்டமைப்பு பெற்றுள்ள வெற்றி சமஷ்டி ஆட்சிக்கானதென அர்த்தப்படாது

## என்கிறார் அமைச்சர் சம்பிக்க



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 17 உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றிய போதிலும் அது சமஷ்டி முறையிலான ஆட்சி அதிகாரத்திற்கு தமிழ் மக்கள் வழங்கிய செய்தி என்று அர்த்தப்படாது எனவும்,

நாட்டுக்கு எதிரான சக்திகளுக்கு இம்முறை தேர்தலில் சிறந்த பதில் கிடைத்துள்ளதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் மின்வலு எரிசக்தி அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் 18 உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றிய போதிலும் அது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சிறிய வாக்கு வித்தியாசத்திலேயே வெற்றிக் கொண்டுள்ளது.

இதனால் தமிழ் மக்கள் தமக்கு சமஷ்டி முறையிலான ஆட்சி அதிகாரத்தை வழங்க வேண்டிய அவசியம் என்ற செய்தியை வழங்கியதாக அர்த்தப்படாது.

தமிழ் மக்களை தூண்டிவிடாது, தாம் கைப்பற்றிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்து காட்ட வேண்டியதே தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்ய வேண்டிய பணி நாட்டின் பெருபான்மையான நிலைப்பாட்டை தமிழ் தேசியக் கூட்டமைப்புக் கூட ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அதன் அடிப்படையில் செயற்படுவதை விடுத்து, நாட்டை மீண்டும் பின்நோக்கி இட்டுச் செல்லும் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது.

இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்கள் ஆதிகாலம் முதல் சிங்கள மக்களுடன் ஐக்கியமாக செயற்பட்டதால், அவர்கள் மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருக்கின்றனர். தமிழ் மக்கள் செல்வநாயகம் போன்றவர்களின் தூண்டுதல் காரணமாக ஆயுதங்களை கையில் எடுத்ததால், இவ்வாறான அனர்த்தங்களை எதிர்நோக்க நேர்ந்தது. இதேபோன்று எதிர்காலத்தில் மீண்டும் தூரதிஷ்டவசமான நிலைமை ஏற்படாதவாறு பார்த்து கொள்ள வேண்டும் எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் கூறியுள்ளார்

## காணிகள் ஆய்வு

(கொழும்பு)

தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தோட்டங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகள் தொடர்பான ஆய்வொன்றை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இதன்கீழ், நாடு முழுவதும் காணப்படும் 450 தோட்டங்களில் செய்கை மேற்கொள்ளப்படாத காணிகள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக பெருந்தோட்ட முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் ராஜா பிரேமதாஸ தெரிவித்தார்.

கடந்த காலப்பகுதியில் 53 வருட வரி முறைமையின் கீழ், அரச பிரிவுகளுக்கு சொந்தமான தோட்டங்கள் தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டன.

இதனையடுத்து, குறித்த நிறுவனங்கள் அந்த தோட்டங்களில் சில காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளாத காரணத்தினால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு குறிப்பிட்டது.

இந்த ஆய்வு எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு பூர்த்தி செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மனித உரிமை மீறல் தொடர்பான 800 முறைப்பாடுகள் நிலுவையில்

(கொழும்பு)

மனித உரிமை மீறல் தொடர்பான 800 முறைப்பாடுகள் நிலுவையில் இருப்பதாக மனித உரிமை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மனித உரிமை ஆணைக் குழுவின் பணிகள் முடங்கிக் கிடந்தமையே இதற்குக் காரணம் என ஆணைக்குழுவின் தலைவர், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிவான் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்ற, மேன் முறையீடு நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்றங்களைச் சேர்ந்த ஐந்து நீதவான்களிடம் குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறுகிய காலப்பகுதியில் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## போக்குவரத்து முற்கொடுப்பனவு அட்டைகள் எதிர்வரும் 2013ஆம் ஆண்டில் அறிமுகம்

(கொழும்பு)

பொதுமக்களின் போக்குவரத்து தொடர்பில் முற்கொடுப்பனவு அட்டைகளை அறிமுகம் செய்வதற்காக போக்குவரத்து அதிகாரிகள் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது. இந்தப் புதிய முறை 2013ஆம் ஆண்டில் அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய முறை பற்றி பஸ் சங்கங்களுடனும் போக்குவரத்து நிறுவனங்களுடனும் பேசப்பட்ட போது அவர்கள் இது பற்றி மிக ஆர்வமாக இருந்ததாக போக்குவரத்து செயலாளர் விக்டர் சமரவீர தெரிவித்தார்.

இந்த புதிய முற்கொடுப்பனவு அட்டை முறைமை பயன்பாட்டுக்கு வரும்போது சில்லறை காசு பற்றிய பிரச்சினை அற்றுப்போகும். பஸ் நடத்துனர்கள் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமலும் போகும். இதனால் முதலாளிமார் நன்மையடைவர் என அவர் குறிப்பிட்டார்.

நாம் இந்த முறை பற்றி மேலும் ஆராய வேண்டும். அத்துடன் முன்னோடி செயற்றிட்டங்கள் மூலம் நிலைத்து இயங்கக்கூடிய ஆற்றலை உறுதி செய்ய வேண்டும். தனியார் துறையினர் இந்த திட்டத்தில் முதலீடு செய்யத் தயாராக உள்ளனர் என விக்டர் சமரவீர மேலும் தெரிவித்தார்.

## மாங்குளப் பகுதி வீடொன்றினுள் இரவு நேரம் புகுந்த படைச்சிப்பாய்

(மாங்குளம்)

மாங்குளம் புதிய கொலனிப் பகுதி குடியிருப்புத் திட்ட வீடொன்றுக்குள் இரவு நேரம் அத்துமீறி நுழைந்த படைச்சிப்பாய் ஒருவர் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டதுடன், தணடனையுடன் கூடிய இடமாற்றத்தையும் பெற்றுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை, குறித்த பகுதியிலுள்ள வீடொன்றினுள் இரவு நேரம் புகுந்த படைச்சிப்பாய் அறைக்குள் படுத்திருந்த குடும்ப பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலியைத் திருட முயற்சி செய்துள்ளார். இதன்போது விழிப்படைந்த பெண் காலைப பாலமாகப் பிடித்ததுடன், உரத்துக் கத்திய வேளை, அருகில் படுத்திருந்த கணவன், விழித்து அவரைப் பிடிக்க முற் ட்டார். எனினும் அவர்கள் போர்த்திப் படுத்திருந்த நுளம்பு வலையால், அவரை மூடி பிடித்தபடி படைச்சிப்பாய் நின்றுள்ளார். தனது சகோதரியின் சத்தம் கேட்டு வீட்டிற்கு வெளியே உறக்கத்திலிருந்த, சகோதரன் ஓடிவந்து குறித்த படைச்சிப் பாயைப் பிடித்து அனைவரும் சேர்ந்து கட்டி வைத்துள்ளனர்.

இது தொடர்பாக மாங்குளத்திலுள்ள சிவில் அலுவலகத்திற்கும், தலைமைச் செயலகத்திற்கும் அறிவிக்கப்பட்டது. உடனடியாகவே சம்பவ இடத்திற்கு வந்த படை அதிகாரிகள் குறித்த படைச்சிப்பாயை தம்முடன் அழைத்துச் சென்றனர்.

இதனையடுத்து,நேற்றுமுன்தினம் குறித்த குடும்பத்தாரின் வீட்டிற்கு வந்த படை அதிகாரிகள், தவறாக நடக்க முயற்சித்த படைச்சிப்பாய்க்கு உரிய தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன் இடமாற்றமும் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் காலங்களில் இவ்வாறான அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறமாட்டாதெனவும் அவ்வாறு இடம்பெற்றால் தமக்கு அறியத்தருமாறும் கூறி, தமது தொலைபேசி இலககங்களையும் வழங்கி விட்டுச் சென்றுள்ளனர். (12)

# வவுனியா அரச விதை உற்பத்திப் பண்ணையில் தேசிய விவசாயிகள் வாரமும், கண்காட்சியும்!

(வவுனியா)

தேசிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் சிறப்பான செயற்பணிக்காக உள்ளூர் உணவு உற்பத்தியையும் நுகர்வோரையும் ஊக்குவிக்கும் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் வவுனியா அரச விதை உற்பத்திப் பண்ணையில் அடுத்த மாதம் முதலாம் திகதி தேசிய விவசாயிகள் வாரமும் கமத்தொழிலுக்குமான கண்காட்சி நடைபெறவுள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனா தலைமையில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியை பிரதமர் டி.எம்.ஜயரட்ன வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். இக்கண்காட்சி ஐந்து தினங்களுக்கு தொடர்ந்து நடைபெறுமென விவசாய அமைச்சின் செயலாளர் கே.ஈ.கருணாதிலக்க தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன், அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் முறையே 2ஆம் 3ஆம் 4ஆம் 5ஆம் நாள் நிகழ்வுகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைப்பார்களென விவசாய அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

2ஆம் நாள் இளைஞர் தொழில்முயற்சியாளர் தின நிகழ்வுகள் நடைபெறும். 3ஆம் நாள் விவசாயக் கல்வி தின நிகழ்வுகளும் 4ஆம் நாள் விவசாய தொழில்நுட்ப, விவசாய கருத்தரங்கு நடைபெறும். உள்ளூர் உணவு ஊக்குவிப்பு தினம் இறுதி நாளாகும்

இந்த நிகழ்வுகளில் விவசாயிகள் கௌரவிக்கப்படுதல், விதைகள் மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை செய்தல், கலைநிகழ்ச்சிகள், விவசாயிகளுக்கான விளையாட்டு போன்றவை இடம்பெறும்.

நவீன விவசாய செய்கை பற்றிய அறிவூட்டல், குறைந்த நீரைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை செய்முறை பற்றிய கண்காட்சியும் நல்லின பழமரக்கன்றுகள் விற்பனையும் நடைபெறும். அத்துடன், விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் நவீன இயந்திரங்களுடைய கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென மாவட்ட அதிபர் தெரிவித்தார்.

தினமும் காலை 9 மணி முதல் இரவு எட்டு மணி வரை கண்காட்சி திடல் திறந்திருக்கும். பொதுமக்கள் பார்வையிடமுடியும்.

## அணைக்கட்டு துப்புரவு

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் உயிலங்குளம் அணைக்கட்டு துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

இப்பிரதேச கமக்கார அமைப்பினரின் ஏற்பாட்டில் அணைக்கட்டின் இரு மருங்கிலும் பற்றைகள் வெட்டப்பட்டு துப்புரவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இக்குளத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் தற்போது 50 ஏக்கர் வரை சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (121)

## மகோற்சவம்

(திருநெல்வேலி)

அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை முதல் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, ஆலயத்தில் விநாயகர், முருகப்பெருமானுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய சித்திரத் தேர்களின் வெள்ளோட்டப் பெருவிழா எதிர்வரும் எட்டாம் திகதி திங்கட்கிழமை 10ஆம் திருவிழாவானது நடைபெறவுள்ளது. (60)

## தொடர் சொற்பொழிவு

(திருநெல்வேலி)

தாவடி தெற்கு கொக்குவில் திருவலுள் மிகு ஸ்ரீ ஆதி காளி அம்பாள் தேவஸ்தானத்தில் வருடாந்த மகோற்சவப் பெருவிழா கடந்த 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தில் இன்று வேட்டைத் திருவிழா, நாளை சப்பறத் திருவிழா, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா, மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. இதில் சிறப்பு உற்சவ தினங்களில் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் சிறப்புப் பேருரையை நிகழ்த்தவுள்ளார். (60)





யாழ். எயிட் நிறுவனத்தினால் கோப்பாய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் மங்களா காட்சியறை உரிமையாளர் கு. ஜெயந்தன் மாணவன் ஒருவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதையும், உதவிப் பொருட்களைப் பெற்ற மாணவர்களுடன் பிரதிநிதிகள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் நிற்பதைக் காணலாம்.

## ஸ்கந்தபுரத்தில் நிலையான சந்தை அமைக்க காணியொன்றைப் பெற்றுத்தரக் கோரிக்கை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பொதுச் சந்தை போதிய வசதிகள் இன்றி தனியார் காணியொன்றில் இயங்கி வருவதாகவும், இதனால் நிலையான கட்டடங்களை அமைத்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது இருப்பதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றன.

1993ஆம் ஆண்டு ஸ்கந்தபுரம் பகுதிக்கான தனியார் காணியில் பொதுச் சந்தை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இன்று வரை சந்தைக்கான காணி எதுவும் ஒதுக்கப்படவில்லை. இந்நிலையில், தற்போது காணி உரிமையாளர் காணிக்கு உரிமை கோரியிருப்பதாகவும், இதனால் நிரந்தரக் கட்டடம் எதையும் அமைத்து வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இதற்கு பொதுக்காணி ஒன்றினைத் தெரிவு செய்து வர்த்தக நிலையங்களை அமைத்து வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தகர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (110)

## விண்ணப்பம் கொடுத்து பல நாட்களாகியும் மின் இணைப்பு வழங்கவில்லையென விசனம்

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு பாண்டியன்குளம் பகுதியில் வீட்டு மின் இணைப்புக்களுக்கு மக்களால் விண்ணப்பப்படிவங்கள் கொடுக்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் தங்களுக்கு மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி பகுதியில் 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின் இணைப்பைப் பெற்றுக் கொள்ளும் வகையில் விண்ணப்பங்களைச் செய்திருந்தன. ஆனால், இன்று வரை தமக்கு மின் விநியோகம் வழங்கப்படவில்லை எனவும், இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து தமக்கான மின்சாரத்தைப் பெற்றுத் தருமாறு தெரிவிக்கின்றனர். (110)

## புதிய பஸ் நிலையம் அமைக்க காணி ஒதுக்கப்பட்டுள்ளது

(வவுனியா)

வவுனியாவில் புதிய பஸ் நிலையம் அமைப்பதற்குரிய இடம் அடையாளம் காணப்பட்டு மூன்று ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுனியா அரசினர் பண்ணையின் நெல் வேளாண்மை செய்யப்படும் காணி, பஸ் நிலைய புதிய கட்டட தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு காணிக்கு மண் போட்டு நிரப்புவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளது என வவுனியா மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றதும் வெளி மாவட்டங்களுக்கு செல்லும் சகல பஸ்களும் இந்த நிலையத்தில் இருந்தே புறப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய பஸ் நிலையத்தின் இடப்பற்றாக் குறையினை நிவர்த்தி செய்யும் நோக்குடன் புதிய பஸ் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## வந்தது பவுசர்

(யாழ்ப்பாணம்)

**வடதாரகை கப்பலில் எரிபொருள் பயன்பாட்டிற்கென வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கனகர பவுசர் வாகனம் ஒன்று கடந்த சனிக்கிழமை கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளது. குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் வேலையில் ஈடுபடும் இந்தக் கப்பலுக்குத் தேவையான அளவு எரிபொருளை வழங்குவதற்கே இந்த பவுசர் எடுத்து வரப்பட்டுள்ளது. (வி)**

## பத்து மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ள நூலகம்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் அ.த.க. பாடசாலையின் நூலகம் உதவி நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் 10 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் இந்நூலகம் முற்றாகச் சேதமடைந்தது.

இதன் பின்னர் இப்பிரதேசங்களில் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இப்பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதுவரை இப்பாடசாலையின் நூலகம் புனரமைக்கப்படாமல் இருந்தது. இதனால் இப்பாடசாலை மாணவர்களும் கல்விச் சமூகத்தினரும் அறிவுத் தேடலை பெற முடியாது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதனையடுத்தே மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்குடன் மேற்படி பாடசாலையின் நூலகம் தற்போது புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (121)

### நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி

## வவுனியா வடக்குப் பகுதியில் சிறுபோக அறுவடை ஆரம்பம்

(ஒட்டுசுட்டான்)

நெடுங்கேணி, முத்தையன்கட்டு, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் சிறுபோக நெற்செய்கை அறுவடை இடம்பெற்று வருகிறது.

இதில் குறுகிய நேரத்தில் அறுவடை செய்யக்கூடிய நவீன அறுவடை இயந்திரங்களை விவசாயிகள் பயன்படுத்தி வருவதால் கால நிலை மாற்றத்தினால் ஏற்படும் மழையின் போது நெல்லை பாதுகாத்துக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் நவீன இயந்திரங்களின் வருகையினால் இப்பிரதேசத்திலுள்ள கூலித் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்துள்ளனர்.

இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்த விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சில பிரதேசங்களில் சீரான நீர் விநியோகம் இன்றி சிறுபோக நெற் செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் நெல்லின் விலை அதிகரிக்கப்பட வேண்டும் என விவசாயிகள் தெரிவித்தனர். (101)

# இந்திய உதவியுடன் குடாநாட்டு பாடசாலைகளுக்கு வகுப்பறைக் கட்டடங்கள் அமைக்க ஏற்பாடு

(பருத்தித்துறை)

இந்திய அரசின் கல்வி தொடர்பான உதவிகள் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெறவுள்ளது.

வடமாகாண விசேட அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சனசமூக நிலையங்கள், விஞ்ஞான ஆய்வு கூடம், வகுப்பறைக் கட்டடங்கள், கணினி கற்கை நிலையம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதுவராலய பொறுப்பதிகாரி வி.மகாலிங்கம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருடன் சில முன் மொழிவு களை மேற்கொண்டுள்ளார்.

இதற்கமைய வடமராட்சி கல்வி வலயத்தில் 4 பாடசாலைகள் வகுப்பறைக் கட்டடத்திற்கென சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி மணற்காடு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் 120x25 அடி நீளமான கட்டடத்திற்கு 5 மில்லியன் ரூபாவும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 130x30 அடி நீளமான மாடிக் கட்டத்திற்கு 14.5 மில்லியன் ரூபாவும், தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலையில் 60x30 அடி நீள மான கட்டடத்திற்கு 7 மில்லியன் ரூபாவும், மாதனை மெ.மி.த. பாடசாலையில் 60x30 மாடிக் கட்டத்திற்கு 7 மில்லியன் ரூபாவும் செலவாகும் என மதிப்பிடு செய்து, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரால் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (109)

# சீரற்ற மின்விநியோகத்தால் இலத்திரனியல் சாதனங்கள் நாசம்

(வேலணை)

தீவகப் பகுதியில் சீரற்ற மின் விநியோகத்தால் மின்சாரத்தினால் இயங்கி வந்த மின்குமிழ்கள், குளிரூட்டிப் பெட்டிகள் வனொலிப் பெட்டி என்பனவும் மின்சார உபகரணங்கள் அதிகளவில் சேதமடைந்துள்ளதாகப் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வேலணை கிழக்கு அம்மன் கோவிலடிப் பகுதியில் திடீரென வந்த அதிவலுக்கூடிய மின்சாரத்தினாலேயே இவ்விதமான மின்சாரப் பொருட்கள் பழுதாகியுள்ளதாக பாவனையாளர் தெரிவித்துள்ளனர். (05)

# போக்குவரத்து வசதிகளை அதிகரிக்குமாறு கோரிக்கை

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் உயிலங்குளம் கிராம மக்கள் நாளாந்தம் தாம் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

முற்பகலில் துணுக்காய் மல்லாவி நகரங்களுக்கான போக்குவரத்து வசதிகள் உள்ளபோதிலும் பிற்பகலிலேயே தங்களுடைய இடங்களுக்கு திரும்பக்கூடிய நிலை காணப்படுவதாக தெரிவிக்கும் இக்கிராம மக்கள் பேருந்துக்காக மல்லாவி, துணுக்காய் நகரங்களில் வெயிலிலும் மழையிலும் நீண்டநேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

23 குடும்பங்கள் வசிக்கும் இக் கிராமத்தில் மாணவர்கள் முதல் அரச உத்தியோகத்தர் வரை தாம் பாடசாலை மற்றும் அலுவலகங் களுக்குச் சென்று திரும்புவதில் பல்வேறு சிரமங்களை நாளாந்தம் எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து போக்குவரத்து நெருக்கடியினை ஓரளவேணும் நீக்கு மாறு இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (121)

# 25 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(அம்பலப்பெருமாள்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழான மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் 6 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா வாழ்வாதார கடனுதவி 25 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இக்கிராமத்தில் சுய தொழில் முயற்சிகள் கால்நடை வளர்ப்பு, சிறு வியாபாரம் என்பவற்றை முன்னெடுப்பதற்காக இக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (121)

# குடாநாட்டு வீதிப்புனரமைப்புக்கென தார்கள் எடுத்து வரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு வீதிகளைப் புனரமைப்பதற்கு இந்த வாரத்திலும் போதியளவு தார் எழுத்து வரப்படவுள்ளது. ஏற்கனவே பவுசர் வாகனம் மூலம் எடுத்து வரப்பட்ட எண்ணெய்த் தார் பண்ணை வீதிக்கு விசிறப்பட்டுள்ளன.

இந்தப் பவுசர் வாகனங்கள் மீண்டும் கொழும்பு நோக்கி தார் ஏற்றிவரச் சென்றுள்ளன. ஆகவே, இந்த வாரத்தில் மீண்டும் எண்ணெய் தார் எடுத்துவரப்படவுள்ளது. (வி)

# தூக்கில் தொங்கிய நிலையில் மாணவன் சடலமாக மீட்பு

(பருத்தித்துறை)

முல்லைத்தீவு மாவட்டம் யோகபுரம் மகாவித்தியாலய மாணவன் ஒருவன் தூக்கில் தொங்கிய நிலையில் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மல்லாவி, அனிஞ்சையன் குளம் பகுதியைச் சேர்ந்த 13 வயது நிரம்பிய தரம் 8 இல் கல்வி பயிலும் சிவசுதன் சாருஜன் என்ற மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தகவல் கிடைத் ததும் சம்பவ இடத்துக்கு விரைந்த இந்தப் பகுதிக்கான கிராம சேவையாளர் இது தொடரபாக மல்லாவிப் பொலிஸாருக்குத் தவல் தெரிவித்தார்.

உடனடியாகச் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணையை மேற்கொண்ட பின்னர் சடலத்தை மீட்டு மல்லா விப் பொது மருத்துவ மனையில் ஒப்படைத்தனர்.

கடந்த சனிக்கிழமை தேர்தல்தினம் ஆகையால் விசாரணைகளில் காலதாமதம் ஏற்பட்டது.

இதனால் சடலத்தைப் பெற்றோர்களிடத்தில் ஒப்படைப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. இவரது மரணத்துக்கான காரணம் இது வரை தெரியவில்லை.

# மல்லாவி, துணுக்காய் மருத்துவமனைகளில் நோயாளர் தொகை திடீரென அதிகரிப்பு

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மல்லாவி மருதுவமனை துணுக்காய் மருத்துவமனை ஆகியவற்றில் நோயாளர் தொகை சடுதியாக அதிகரித்துள்ளது.

தற்போது நிலவும் கடும் வெப்பத்துடன் கூடிய காலநிலை காரணமாக நோயாளர்கள் தொகை அதிகரித்துள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சாதாரண காய்ச்சல், வைரஸ் காய்ச்சல், வயிற்றோட்டம் என்பன கூடுதலாக நோயாளர்களைப் பாதித்துள்ளதாக மருத்துவர்களினால் தெரிவிக்கப்படுகிறது.

மல்லாவி மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவில் பெருமளவு நோயாளர்கள் நாளாந்தம் சிகிச்சை பெற்று வருவதை காணக்கூடியதாக உள்ளது.

இதேபோன்று துணுக்காய் மருத்துவமனையிலும் நோயாளர்கள் பெருமளவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தற்போது இப்பகுதிகளில் நிலவும் குடிநீர் தடுபபாட்டினைக் கருத்திக்கொண்டு மருத்துவர்கள் கொதித்தாறிய நரை மக்கள் அருந்துமாறும் ஆலோசனை வழங்கி வருகின்றனர். (121)

# திருநெல்வேலி சந்தைப் பகுதியில் மீண்டும் நிறுத்தப்படும் சைக்கிள்கள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தைக்கு முன்பாக சைக்கிள்கள் மற்றும் வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்துச் செய்ய பெரும் நெருக்கடி நிலை காணப்படுகின்றன.

ஆடியபாதம் வீதியிலும், பலாலி வீதியோரத்தினலும் இவ்வாறு சைக்கிள்களையும், வாகனங்களையும் நிறுத்திவிட்டுச் செல்வதால் அங்கு இடநெருக்கடி காணப்படுகின்றன.

அதனைவிட போக்குவரத்திற்கும் பெரும் சிரமம் ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு நிறுத்தப்பட்ட சைக்கிள்களை அண்மையில் நல்லூர் பிரதேச சபையினர் தமது வாகனங்களில் ஏற்றிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

# எழுத்தறிவுப் போட்டிகள் இருபதில் ஆரம்பம்

(பருத்தித்துறை)

மாகாண மட்டத்திலான எழுத்தறிவு தினப்போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எனவே, வலயமட்டப் போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களை மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார். (109)



கொக்கிளாய் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு சேவாலங்கா நிறுவனம் கிணறுகளைப் புனரமைத்து கையளித்து வருகிறது. இவ்வாறு அந்த நிறுவனத்தால் புனரமைக்கப்பட்ட கிணறு ஒன்றைக் காணலாம். (17)

# தபாலதிபர் பரீட்சையில் சித்திபெற்றவர்கள் வன்னித் தபாலகங்களில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

தபால் அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த ஆறு பேரும் வன்னிப் பகுதியிலுள்ள தபாலகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கங்கள் கடந்த வாரம் வழங்கப்பட்டது.

போட்டிப் பரீட்சை மூலம் சித்தியடைந்த இவர்களுக்கு இரண்டு வாரகால பயிற்சிகளும் தபாலக பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்பட்டது. (வி)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(27.07.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஆடி 11 ஆம் நாள்.
இராகுகாலம் 12.02–1.32, சுபநேரம் 4.32 –6.02,
நட்சத்திரம் ரோகிணி காலை 6.34 வரை
திதி: துவாதசி பி.இ 2.45 வரை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– பணவரவு, குடும்பத்தில் நிம்மதி, மனமகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், விபத்து வரலாம்.

**ரிஷபம:**– பணக் கஷ்டம், நண்பர் தொல்லை, கடன் தொல்லை, உறவினர் வருகை, மதிப்பு உயர்வு.

**மிதுனம் :**– குடும்பத்தில் கவலை, நண்பர் வருகை, தேக ஆரோக்கியம், அதிகாரப் போட்டி, காரியத் தடை.

**கடகம்:**– பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், காரியத்தடை, தேக சுகம் குறைவு, மனச்சஞ்சலம்.

**சிம்மம்:**– பணவரவு, தேக நலம் பாதிப்பு, மனமகிழ்ச்சி, குடும்பத்தில் குதூகலம், மதிப்பு உயர்வு.

**கன்னி :**– பணக் கஷ்டம், காரியத் தடை, மனச் சஞ்சலம், குடும்பத்தில் குழப்பநிலை, தெரு விபத்து.

**துலாம் :**– பணவரவு, மனமகிழ்ச்சி, குடும்பத்தில் குதூகலம், தேக ஆரோக்கியம், மதிப்பு உயர்வு.

**விருச்சிகம்:**– காரியத்தடை, பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், நல்லோர் நட்பு.

**தனுசு:**– குடும்பத்தில் குழப்பம், மனச் சஞ்சலம், உடல் நலம் பாதிப்பு, பணக் கஷ்டம், விபத்து வரலாம்.

**மகரம:**– மனமகிழ்ச்சி, பண வரவு, மதிப்பு உயர்வு, குடும்பத்தில் குதூகலம், தேக ஆரோக்கியம்.

**கும்பம் :**– பணக் கஷ்டம், மனச் சஞ்சலம், குடும்பத்தில் கவலை, நண்பர் உதவி, மூத்தோர் ஆசி.

**மீனம்:**– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, மனச் சஞ்சலம், விருந்தினர் வருகை, திருடர் பயம்.

# பெண்களுக்கான தடகளப் போட்டியில் வடமாகாணத்திற்கு 6 தங்கப் பதக்கம்

(வவுனியா)

இலங்கை மெய்வன்மைச்சங்கம் பெணகளுக்காக அகில இலங்கை ரீதியில் நடாத்திய தடகளப் போட்டிகளில் வடமாகாண வீராங்கனைகள் ஆறு பதக்கங்களை வென்றுள்ளார்கள்.

கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பு தியகமவில் அமைந்துள்ள ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் அகில இலங்கை ரீதியாக வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ரி.அனுசா பெண்களுக்கான திறந்த போட்டியில் கலந்து கொண்டு தட்டெறிதலில் 43.50 மீற்றர் தூரத்தை எறிந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை பெற்றுள்ளார்.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர்.தர்சினி குண்டெறிதலில் 9.32 மீற்றர் எறிந்தும் தட்டெறிதலில் 27.26 மீற்றர் எறிந்தும் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்று வெண்கலப் பதக்கங்களை பெற்றுள்ளார்.

3000 மீற்றர் வேகநடைப் போட்டியில் வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலய வீராங்கனை 17:18 செக்கனில் நடந்து மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

யாழ். மாவட்டத்தைத் சேர்ந்த அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வீராங்கனைகளான அருந்தவம் பவித்திரா 2.60 மீற்றர் இராசதுரை காவேரி 2.50 மீற்றர் ஆகியோர் முறையே 20 வயதுப் பிரிவினருக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்று வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கங்களைப் பெற்றுள்ளார்கள்.


## முதல் சுற்று ஆட்டங்கள் ஏழாம் திகதி வரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்று அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவடையாததன் காரணமாக எதிர்வரும் ஏழாம் திகதி வரை முதல் சுற்று ஆட்டங்கள் நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

22ஆம் திகதியுடன் முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவடையும் என அறிவிக்கப்பட்டபோதிலும், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் மற்றும் இரண்டாம் தவணைப் பரீட்சைகள் காரணமாக சில போட்டிகள் குறித்த நாட்களில் நடாத்தி முடிக்க முடியாமல் போனதாகவும், இதன் காரணமாகவே மேற்படி போட்டிகள் எதிர்வரும் ஏழாம் திகதி வரை நடைபெறும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# கனுசனின் சிறப்பான வேகப்பந்து வீச்சினால் விக்ரோறியாவை வீழ்த்தியது சென். ஜோன்ஸ்



(யாழ்ப்பாணம்)

கனுசனின் சிறப்பான வேகப்பந்து வீச்சின் மூலம் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயது அணிகளுக்கிடையிலான போட்டியிலேயே சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

அண்மையில் நடைபெற்ற இப்போட்டி சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சுழிபுரம் விக்டோரியக் கல்லூரி அணி 22.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரசாத் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கனுசன் எட்டு ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் நிலோசன் 26 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 17.2 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கபில்ராஜ் ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களைப் பெற்றார். வீழ்தப்பட்ட விக்கெட்டை பிரசாத் கைப்பற்றினார்.

# கராத்தே நுணுக்கங்கள் மாணவர்களுக்கு கற்பிப்பு



பெரிய கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தில் கராத்தே கலையைப் பயின்று வரும் வீரர்களை அண்மையில் சர்வதேச கராத்தே சங்கத்தின் டென்மார்க்கின் பயிற்றுநரும், கொழும்புத்துறையைச் சேர்ந்தவருமான மோகன்தாஸ் மற்றும் அவரது இரு புதல்வர்களும் சென்று கராத்தே தொடர்பான நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்தனர்.

சென்சே கே.எஸ். விஜயராஜ் (கறுப்புப் பட்டி 5, இலங்கை கராத்தே சம்மேளனத்தின் கறுப்புப் பட்டி 3) இடம் பயிலும் கராத்தே வீரர்களுக்கு மேற்படி கராத்தே நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்துள்ளார்.

இது குறித்து கராத்தே ஆசிரியர் சென்சே கே.எஸ். விஜயராஜ் குறிப்பிடுகையில், எனது வேண்டுகோளுக்கு இணங்கி, எமது நிலையத்தின் பயிலும் வீரர்களுக்கு கராத்தே தொடர்பான முக்கிய நுணுக்கங்களை மோகனதாஸ் அவர்கள் வழங்கினார். இது பயன்தரும் வகையில் அமைந்ததாக நான் உணர்கின்றேன். எனவே, அவர் இங்கு வந்து சில நுணுக்கங்களை எமது கராத்தே வீரர்களுடன் பகிர்ந்து கொண்டதையிட்டு அவருக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம் என்றார்.

# முன்பள்ளி விளையாட்டு



(மன்னார்)

மன்னார் எமில் நகர் பூண்டி மாதா முன்பள்ளி பாடசாலையில் 2011ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை எமில் நகர் கிராமத்தில் நடைபெற்றது.

இதன்போது சிறார்களின் விளையாட்டுக்கள் இடம்பெற்றது. இதில் 75 மீற்றர் ஓட்டப் போட்டி, பழம் பொறுக்குதல், சங்கீதக் கதிரை, வேடமிடுதல், இசையும் அசைவும் போன்ற போட்டிகளும் இடம்பெற்றது. சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் யாவும் பெரியோரை பரவசத்தில் ஆழ்த்தும் வகையில் அமைந்திருந்தது.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. இப்போட்டி நிகழ்வில் கிராமத்து பெரியோர், பெற்றோர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற அணிகள் விபரம்

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 46ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டியில் நேற்று முன்தினம் இரவு 7.00 மணிக்கு நடைபெற்ற போட்டியில் மட்டுவில் ஜங்கரன் அணியை எதிர்த்து ஆவரங்கால் ஸ்ரீமுருகன் அணி மோதியது.

இதில் மட்டுவில் ஜங்கரன் அணி 2:1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றுக் கொண்டது.

மற்றொரு போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'பி' அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் அணி மோதியது. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'பி' அணி 2 : 1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றுக் கொண்டது.

இதில் இன்று இரவு 7.00 மணிக்கு நடைபெறும் முதல் சுற்றில் மோகனதாஸ் அணியை எதிர்த்து கைதடி மின்னொளி அணி மோதவுள்ளது.

இரண்டாவது சுற்றில் நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் அணி மோதவுள்ளது.

நாளை இரவு 7.00 மணிக்கு நடைபெறும் முதல் சுற்றில் கைதடி நவசக்தி அணியை எதிர்த்து மட்டுவில் வளர்மதி அணியும், இரண்டாவது சுற்றில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணியை எதிர்த்து கோப்பாய் ஐக்கிய அணி மோதவுள்ளது.

மின்னொளியில் இப்போட்டி நடாத்தப்படுவதால் வயது பேதமின்றி பெருமள வான ரசிகர்கள் போட்டிக் கண்டுகளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (118)

# இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான சத்தியப்பிரமாண வாசகம் அறிமுகம்

(பருத்தித்துறை)

பாடசாலைகளில் நடைபெறும் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் ஒலிம்பிக் சுடரேற்றி சத்தியப்பிரமாணம் செய்வதற்கான வாசகம் ஒன்று வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சினால் சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாசகத்தில் நாம் விளையாட்டின் மகிமைக்காகவும், எமது நாட்டின் கௌரவத்துக்காகவும் விருப்புடனும் நேர்மையான போட்டி மனப்பான்மையுடனும் போட்டி விதிகளையும் பிரமாணங்களையும் மதித்து உண்மையான விளையாட்டு வீரரின் ஆன்மார்த்த உணர்வுடன் இவ் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுகின்றோம் என உறுதிபூணுகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் நடைபெறவுள்ள இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் மாணவர்கள் இந்த வாசகத்தைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (109)




யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் மைலோ நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட மைலோ கிண்ண வலைப்பந்தாட்ட 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடத்தை பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயமும், இரண்டாமிடத்தை வட இந்து மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டதுடன் தேசிய மட்டப் போட்டியில் பங்கேற்கவும் தகுதி பெற்றுள்ளன. (12)

## மக்கள் வாழ்த்து

கோபா கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணத்தை வெற்றிகொண்ட உருகுவே அணிக்கு அந்த நாட்டு மக்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

உருகுவே அணியின் ரசிகர்கள் வீதிகளில் கொண்டாட்டங்களில் ஈடுபட்டதாகவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

ஆர்ஜென்டீனாவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பரகுவேயை மூன்றுக்கு பூஜ்ஜியம் என்ற கணக்கில் வெற்றிகொண்ட உருகுவே 15 ஆவது தடவையாக கிண்ணத்தைக் கைப்பற்றியது.


## இந்தியாவுக்கு தொடர்ந்தும் நெருக்கடி கொடுக்கப்படும்

(லண்டன்)

டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணிகுத் தொடர்ந்து நெருக்கடி தருவோம் என இங்கிலாந்து வீரர் மாட் பிரையர் தெரிவித்துள்ளார்.

நான்காவது நாளில் உணவு இடைவேளைக்கு முன், துடுப்பாட்டம் செய்ய களமிறங்குவேன் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இந்திய வீரர்களின் கை ஓங்கி இருந்தது. இஷாந்த் சர்மாவும் மிரட்டிக் கொண்டிருந்தார். ரசிகர்கள் சபதமும் அதிகமாக இருந்தது. இந்நிலையில் ஐந்து விக்கெட்டுக்கு 65 ரன்கள் என்ற நிலையில், துடுப்பாட்டம் செய்ய களமிறங்கியது மிகவும் நெருக்கடியாக இருந்தது.

முதல் மூன்று நாட்களில் சிறப்பாக விளையாடிய நிலையில், இரண்டாவது இன்னிங்சில் ஓட்டங்களைச் சேகரிக்க விரும்பினோம். இந்நிலையில் சிறப்பாக செயற்பட்டு, மீண்டும் போட்டியை கட்டுப்



பாட்டுக்குள் கொண்டு வந்தது மகிழ்ச்சியாக உள்ளது. டெஸ்ட் போட்டிகளில் எதிரணிக்கு நெருக்கடி கொடுத்து தான் போட்டிகளில் வெற்றி பெற்று வந்துள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக இப்படித் தான் செய்து வருகிறோம். தொடர்ந்து இந்திய அணிக்கு எதிரான போட்டிகளிலும் இதே முறையை பின்பற்றுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## மூன்றாவது தலைமுறையாக சாதித்ததில் பெருமைப்படுகிறேன்

### உருகுவே வீரர் டியாகோ போர்லான் பெருமிதம்

(மென்டோசா)

15ஆவது முறையாக கோபா கிண்ணத்தை உருகுவே அணி வென்றது என்பதைவிட மூன்றாவது தலைமுறையாக நானும் சாதிருத்திருப்பதே சிறப்பாகக் கருதுகின்றேன் என உருகுவே வீரர் டியாகோ போர்லான் தெரிவித்தார்.

இதுவரை 21 முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறிய உருகுவே அணி, 15ஆவது முறையாக (1916, 17, 20, 23, 24, 26, 35, 42, 56, 59, 67, 83, 87, 95) கோப்பை வென்று சாதித்தது. தவிர, 1995இக்குப் பின் இத்தொடரில் உருகுவே அணி வெல்லும் முதல் கோப்பை இதுவாகும்.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இந்த கோப்பை மிகவும் சிறப்பானது. ஏனெனில் எனது தாத்தா, அப்பா இருவரும் கோபா கோப்பை வென்று இருந்தனர். இப்போது மூன்றாவது தலைமுறையாக நானும் சாதித்துள்ளேன். இனி வரலாற்றில் போர்லான் பெயர் என்றென்றும் நிலைத்திருக்கும்.

அந்த வகையில், என்னைப் பொறுத்து 15ஆவது முறையாக உருகுவே அணி கிண்ணத்தை வென்றது என்பதற்கு அப்பால், மூன்றாவது தலைமுறையாக நானும் சாதித்திருப்பதே சிறப்பாகும் என்றார்.

## பாரத ரத்னா விருது முதலில் யாருக்கு?

(போபால்)

கிரிக்கெட் வீரர் சச்சினுக்கு முன்பாக, முன்னாள் ஹொக்கி வீரர் தியான் சந்துக்குத் தான் பாரத ரத்னா விருது வழங்கவேண்டும், என, மத்திய பிரதேச முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.

நாட்டின் மிக உயர்ந்த விருது பாரத் ரத்னா. இதற்கான தேர்வு பட்டியலில், விரைவில் விளையாட்டு துறையும் சேர்க்கப்படும் என்று தெரிகிறது. இதையடுத்து கிரிக்கெட்டில் சிறந்து விளங்கும் சச்சினுக்கு, பாரத் ரத்னா விருது வழங்கவேண்டும் என்று, பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து சிவ்ராஜ் சிங் சவுகான் கூறுகையில், பல இலட்சம் மக்களின் உள்ளத்தை கவர்ந்த கிரிக்கெட் வீரர் சச்சினுக்கு, பாரத் ரத்னா விருது கொடுக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அதேநேரம், உலக அரங்கில் இந்தியாவுக்கு முதலில் பெருமை சேர்த்தது ஹொக்கி வீரர் தியான் சந்த் தான். இதனால் கிரிக்கெட் வீரர் சச்சினை விட, சம்பியன் வீரரான இவருக்குத் தான், பாரத் ரத்னா விருது கொடுப்பதில் முன்னுரிமை தரவேண்டும் என்றார்.

## குறைவான ஓவர் பந்து வீச்சு போட்டித் தடையில் டோனி



(லண்டன்)

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் குறைவான ஓவர் விகிதத்தில் பந்து வீசப்பட்டதன் காரணமாக இந்திய அணித் தலைவர் டோனிக்கு ஒரு போட்டியில் தடை விதிக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரு மணி நேரத்துக்கு 15 ஓவர்கள் என்ற விகிதத்தில் பந்துவீச வேண்டிய நிலையில் 13 ஓவர்கள் மட்டுமே இந்தியா பந்து வீசியுள்ளதால் அவருக்கு இந்தத் தடை விதிக்கப்படக்கூடும் என்று தெரிகிறது.


12 மாத காலத்தில் 3 நிகழ்வுகளில் குறைவான ஓவர் விகிதத்தில் பந்து வீசப்பட்டிருந்தால் அந்த அணியின் தலைவருக்கு ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்படும் என்று ஐசிசி விதிமுறை குறிப்பிடுகிறது.

டோனி ஏற்கனவே இதுபோன்று 2 சம்பவங்களில் குறைவான ஓவர் விகிதத்தில் பந்துவீசியதாக ஐசிசியால் குறிப்பிடப்பட்டுள்ளார்.

ஜனவரியில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின்போதும், சமீபத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியின்போதும் குறைவான விகிதத்தில் பந்துவீசியதாக ஐசிசியால் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

தற்போது 3ஆவது முறையாக குறைவான ஓவர் விகிதத்தில் பந்து வீசப்பட்டதாக குற்றம்சாட்டப்படுவதால் அவருக்கு ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அட்லாண்டா ரென்னிஸ் மார்டிபிஷ் சம்பியன்



(அட்லாண்டா)

அட்லாண்டா ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரின் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், அமெரிக்காவின் மார்டி பிஷ் சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்காவில் உள்ள அட்லாண்டா நகரில், ஏ.டி.பி., ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடர் நடந்தது. இதில் நேற்று முன்தினம் நடந்த ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், அமெரிக்காவின் மார்டி பிஷ், சக வீரர் ஜான் இஷ்னரை எதிர் கொண்டார். இதில் மார்டி பிஷ் 3-6, 7-6, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

இரட்டையர் பிரிவில் அமெரிக்காவின் அலெக்ஸ், அவுஸ்ரேலியாவின் மேத்யூ ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

## செலவினங்களைக் கட்டுப்படுத்த பணியாளர்களை குறைக்க முடிவு

(கொழும்பு)

செலவினங்களைக் குறைக்கும் வகையில் இலங்கை கிரிக்கெட் சபை தலைமையகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபை தலைவர் உபாலி தர்மதாச திட்டமிட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபை தலைமையகத்தில் தற்போது 82 ஊழியர்கள் உள்ளனர். இவர்களின் எண்ணிக்கையை 50 ஆக குறைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக உபாலி தர்மதாச குறிப்பிட்டார்.

எனினும் சபை நடவடிக்கைகள் மேற்கொள்ள 30 ஊழியர்கள் போதுமானது என கூறிய அவர் எதிர்காலத்தில் இந்த இலக்கிற்கு அமைய ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டிலுள்ள அனைத்து பிரதேசங்களிலிருந்தும் பயிற்சி முகாம்கள் நிறுவப்பட்டு நல்ல கிரிக்கெட் பயிற்சிகள் இளம் வீரர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருதாக அவர் மேலும் தெரிவித்தார்.



## அர்ஜுனா விருதுக்குத் தெரிவாகவில்லை பதக்கங்களை கையளிக்கிறார் ரேணுபாலா

கடந்த ஆண்டுக்கான அர்ஜுனா விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட வீரர்-வீராங்கனைகளின் பெயர் விவரம் சமீபத்தில் வெளியானது. இதில் மெல்போர்ன் மற்றும் புதுடில்லியில் நடந்த கொமன்வெல்த் போட்டியில் பளுதூக்குதலில் தங்கப்பதக்கமும், ஆசிய சாம்பியன் ஷிப் போட்டியில் வெண்கலப்பதக்கமும் வென்ற இந்திய வீராங்கனை ரேணுபாலா சானுவின் பெயர் இடம்பெறவில்லை. இதனால் கடும் கோபம் அடைந்துள்ள மணிப்பூரை சேர்ந்த ரேணுபாலா, இதுவரை தான் வென்ற பதக்கங்கள் மற்றும் தனது சகோதரர் தேசிய அளவில் வென்ற பதக்கங்களையும் மத்திய விளையாட்டு துறை அமைச்சரிடம் ஒப்படைக்க இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து ரேணுபாலா கூறுகையில், அர்ஜுனா விருதுக்கு எனது பெயரை தேர்வு செய்யாதது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. 11 ஆண்டுகளாக சிறந்த நிலையில் விளங்கும் எனக்கு விருது அளிக்காதது ஏமாற்றத்தை கொடுக்கிறது. பளுதூக்கும் வீரர் ரவிக்குமார் இந்த விருதுக்கு தகுதியானவர் தான். ஆனால் அவரை விட அதிக தகுதி எனக்கு இருக்கிறது என்று தெரிவித்தார்.

# கல்விச் சுற்றுலாவிற்காகவே இந்தியாவிற்கு படையினர் சென்றனர்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

பயிற்சிக்காக இந்தியா சென்ற இலங்கைப் படையினர் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாக வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்துள்ளார். இலங்கையைச் சேர்ந்த 23 படையதிகாரிகள் இந்தியாவில் பயிற்சி பெறச்செல்லவில்லையெனவும் அவர்கள் கல்விச் சுற்றுலாவிற்காகவே சென்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழக அரசியல் கட்சிகளின் அழுத்தம் காரணமாக இலங்கைப் படையதிகாரிகள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும், உண்மையில் அவ்வாறு திருப்பி அனுப்பப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு இலங்கை படையதிகாரிகள் கல்விச் சுற்றுலாக்களை மேற் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# சனல் - 4 வெளியிட்ட காணொளிக்காட்சி போலியான தகவல்களை கொண்டது

## என்கிறது நல்லிணக்க ஆணைக்குழு



(கொழும்பு)

இலங்கையில் போர்க் குற்றங்கள் இடம்பெற்றதாக பிரித்தானியாவின் சனல் -4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொளி, போலியான தகவல்களை உள்ளடக்கியதென கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

தொழில்நுட்ப நிபுணர்களின் ஊடாக, குறித்த காணொளி தொடர்பில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக நல்லிணக்க ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

குறித்த காணொளியில் காணப்படும் பல விடயங்கள் செம்மைப்படுத்தப்பட்டவை எனவும், சில காட்சிகள் பொய்யான பின்னணி மற்றும் கட்டமைப்புக்களுடன் உருவாக்கப்பட்டவை எனவும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த விசாரணைகளின் போது, சனல் -4 காணொளி தொடர்பில் பல்வேறு வல்லுனர்கள் வெளியிட்ட கருத்துக்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கமைய, இந்த விசாரணைகளின் பெறுபேறுகளை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

## தூக்கில் தொங்கிய நிலையில் இராணுவ அதிகாரி சடலமாக மீட்பு

(கொழும்பு)

மாத்தளை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவர் தனது உடைகளைப் பயன்படுத்தி தூக்கில் தொங்கித் தற்கொலை செய்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மோசடிக் குற்றச்சாட்டு ஒன்றின் பெயரில் முகாமில் தனியான அறை ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையிலேயே 24 வயதான லலித் முதுசங்க வீரக்கொடி என்ற குறிப்பிட்ட இராணுவ அதிகாரி தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆரம்பகட்ட விசாரணைகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இது தொடர்பாக முழுமையான விசாரணைகளை நடத்துமாறு மாத்தளை பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# இலங்கைக்கான, அமெரிக்க நிதியுதவி நிறுத்தம் தடுப்பதற்கு பல்தேசிய நிறுவனங்கள் முயற்சி?

(கொழும்பு)

**இலங்கைக்கான உதவிகளை தடை செய்வதற்கு அமெரிக்க காங்கிரசின் வெளிவிவகாரக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், சில பல்தேசிய நிறுவனங்கள் இலங்கையுடனான வர்த்தக உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்குமாறு அமெரிக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்க முனைவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

கொகா கோலா, போயிங் உள்ளிட்ட 12 பல்தேசிய நிறுவனங்கள் இலங்கை-அமெரிக்க வர்த்தக உறவுகளை வலுப்படுத்தும் வகையிலான கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கவுள்ளதாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளன.

இக் கடிதத்தில் இலங்கையின் பொருளாதாரம் விரைவாக வளர்ந்து வருவதைக் காண்பிக்கும் புள்ளிவிபரங்களைச் சுட்டிக்காட்டி , இலங்கை-அமெரிக்க வர்த்தக உறவுகள் வலுபபடுத்தப்படுவது இருநாடுகளுக்கும் நன்மையை ஏற்படுத்தும் என்று கூறப்பட்டுள்ளது.

இலங்கைக்கான உதவிகளை அமெரிக்கா தடை செய்யவுள்ளது பற்றி இந்தக் கடிதத்தில் நேரடியாக எதுவும் குறிப்பிடப்படாத போதும்- அமெரிக்க அரசுக்கு மறைமுகமாக அழுத்தம் ஒன்றைக் கொடுக்கும் முயற்சியாகவே இது கருதப்படுகிறது

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் வரை இலங்கைக்கான உதவிகளைத் தடைசெய்ய அமெரிக்க வெளிவிகாரக் குழு எடுத்துள்ள தீர்மானம் அமெரிக்க செனெட் மற்றும் காங்கிரசில் விவாதிக்கப்பட்டே இறுதி முடிவு எடுக்கப்படும்.

இந்தத் தடை நடைமுறைப்படுத்தப்பட்டால் இலங்கை ஆண்டுதேற்றும் 13 மில்லியன் டொலர் அபிவிருத்தி நிதியை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயே பல்தேசிய நிறுவனங்கள் இலங்கையுடனான வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக அமெரிக்க அரசுக்கு அழுத்தம் ஒன்றைக் கொடுக்க முனைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# விமான நிலைய ஊழியருக்கு இலஞ்சம் இலங்கை வர்த்தகருக்கு அபராதம்

(கொழும்பு)

சிங்கப்பூர் விமான நிலையத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவருக்கு இலஞ்சம் வழங்கினார் என்ற வழக்கில் குற்றத்தை ஒப்புக் கொண்ட இலங்கை வர்த்தகர் ஒருவருக்கு சிங்கப்பூர் நாட்டு மாவட்ட நீதிமன்றம் ஒன்று 5000 அமெரிக்க டொலர் அபராதம் வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

இவ் வர்த்தகரின் பெயர் பிரதீப் ரூப சிங்க. வயது 41. பொருட்களை கொள்வனவு செய்கின்றமைக்காக அடிக்கடி சிங்கப்பூர் சென்று வருவார்.

சிங்கப்பூர் விமான நிலையத்தில் பயணிகள் உதவியாளாக கடமையாற்றுகின்ற வில்லியம் வொங் என்பவருடன் நெருக்கம் ஆனார்.சிங்கப்பூர் விமான நிலையத்தில் இருந்து பயணம் மேற்கொள்கின்றவர்களின் பொதிகளை சோதனை செய்கின்றமையும்.

அதிக நிறை உடைய பொதிகளுக்கு உரிய தண்டப் பணம் அறவிடுகின்றமையும் வில்லியம் வொங்கின் பிரதான கடமைகள்.

வொங்கை கைக்குள் போட்டுக் கொண்ட இலங்கை வர்த்தகர். 2008 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் 300 டொலரும், அதே வருடம் ஒக்டோபர் மாதம் 400 டொலரும் வொங்குக்கு இலஞ்சம் கொடுத்து இருக்கின்றார்.

இவர் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டமையால் குறைந்த பட்சத் தண்டனைதான் வழங்கப்பட்டது.இதே நேரம் வொங் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டார். இவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது

# போதைப் பொருள் வைத்திருந்தவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பு

(கொழும்பு)

போதைப் பொருளை தன்வசம் வைத்திருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்த ஒருவர் உரிய சாட்சியங்களுடன் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதை அடுத்து கொழும்பு மேல் நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

சட்டமா அதிபரினால் குறித்த நபருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஹெரோயின் வகைப் போதைப் பொருள் 543 கிராம் குறித்த நபரிடம் இருந்தபோது அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தரப்பால் நீதிமன்றில் கூறப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இந்த வழங்கு கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் தக்க ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளதால் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ப்ரீதி பத்மத் சுரசேன மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

## நைகர் நாட்டு முன்னாள் போராளிகளுக்கு இலங்கையில் தொழிற்பயிற்சிகள்

(கொழும்பு)

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைகர் டெல்டா நாட்டின் முன்னாள் போராளிகளுக்கு இலங்கையில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ள்ன.

நைகர் நாட்டிலிருந்து முன்னாள் ஆண் போராளிகள் 50 பேர் இலங்கை வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முன்னாள் போராளிகளுக்கு படகு கட்டுமானம், நீருக்கடியிலான நடவடிக்கைகள், ஆழ்கடல் பொருத்துக்கள் மற்றும் முத்துக்குளித்தல் உட்பட பல துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கையில் உள்ள Topher Zhang என்ற தொழிற்கல்வி பயிற்சி நிறுவனத்தில் இவர்களுக்கு 6 மாதத்திற்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது

# கப்பம் கோரி கடத்தப்பட்ட மாணவன் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டார்

(கொழும்பு)

50 இலட்சம் ரூபா கப்பம் கோரி கல்கிசைப் பகுதியில் கடத்தப்பட்ட மாணவன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யக்கல பகுதியில் குறித்த மாணவன் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் தற்போது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கல்கிசை டெம்ளர்ஸ் வீதியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு வான் ஒன்றில் வருகை தந்த குழுவினர் குறித்த மாணவனின் தாயை கட்டிப்போட்டுவிட்டு நேற்றுமுன்தினம் மாலை இந்தக் கடத்தலை மேற்கொண்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொழும்பு பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 15 வயது மாணவன் ஒருவனே இவ்வாறு கடத்தப்பட்டிருந்தார்.

குறித்த மாணவனின் தந்தை பிரபல நிறுவனம் ஒன்றில் ஆய்வுப் பணிப்பாளராக பணிபுரிவதுடன் தற்போது சுற்றுலா நிமிர்த்தம் வெளியூர் சென்றிருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைதுசெய்வதற்கான விசாரணைகளை கல்கிசைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# 1639 பில்லியன் கடன்

(கொழும்பு)

2010ம் ஆண்டில் அரசாங்கம் 1639 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கக் கடன் தொடர்பான நாடாளுமன்ற அறிக்கையில் இந்த புள்ளி விபரத் தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

2009ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் தொகை 21 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது. பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகையில் 840 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன்களுக்கான வட்டியாக மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

43. வரன் கிழக்கு நோக்கி நின்று 5 மீற்றர் முன்னோக்கிச் சென்றபின் இடது பக்கம் திரும்பி 5 மீற்றர் முன்னோக்கிச் சென்று பின் வலதுபக்கம் திரும்பி 5 மீற்றர் முன்னோக்கிச்சென்றான். இதனைக் அருகேயுள்ள கூட்டினுள் வரைந்து காட்டுக.

44. 1.132, 1.004, 1.5, 1.148 இல் மிகவும் பெரிய எண் எது?

.................................................................................................

45. * = X இனையும் / = ÷ இனையும் குறிப்பின் 5 * 6/3 இன் பெறுமானத்தை எழுதுக.

.................................................................................................

**கீழே சில தகவல்கள் முதலாவது கூட்டில் தரப்பட்டுள்ளன. அவற்றோடு மிகவும் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள தகவல்கள் மூன்றாவது கூட்டில் தரப்பட்டுள்ளன. முதலாவது கூட்டில் தரப்படும் தகவல்களுக்குப் பொருத்தமான விடையை மூன்றாவது கூட்டில் இருந்து தெரிந்து எடுத்து அதற்குரிய இலக்கத்தை இரண்டாவது கூட்டில் எழுதுக. உமது வசதிக்காக முதலாவது வரிசை நிரப்பப்பட்டுள்ளது.**

| | ஆதாரத் தகவல்கள் | சரியான விடையின் இலக்கம் | விடைக்குரிய தகவல் |
|---|---|---|---|
| | கொப்பளிப்பான், சின்னமுத்து, கண்நோய், டெங்குக் காய்ச்சல். | (4) | 1) பண்டைய ராசதானிகள் |
| 46. | மகாத்மா காந்தி, ஆறுமுக நாவலர், சித்திலெப்பை, அநாகரிக தர்மபால | | 2) அரிய அங்கிகள் அழிவடைதல் |
| 47. | ருகுணுரட்டை, மாயரட்டை, ராயரட்டை | | 3) நோய்க் காவி |
| 48. | பாராளுமன்றம், மாகாணசபை, மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை | | 4) தொற்று நோய்கள் |
| 49. | பழப்பாகு, பழச்சாறு, புளியிட்ட மீன், ஊறுகாய் | | 5) நோய் ஆக்கி |
| 50. | மரம்வெட்டல், கிருமி நாசினிப் பிரயோகம் | | 6) விளையாட்டு விழா |
| 51. | சிலந்தி வலை, தேன்கூடு | | 7) விறகுக்கான மாற்றுச் சக்தி |
| 52. | ஈ, நுளம்பு | | 8) பாதுகாக்கப்பட்ட உணவு வகை |
| 53. | பற்றீரியா, வைரஸ் | | 9) பல்வேறு நிர்வாக நிறுவனங்கள் |
| 54. | ஒலிம்பிக் தீபம் ஏற்றுதல் | | 10) இம்சைப்படுத்தலை எதிர்த்தவர்கள் |
| 55. | சூரிய அடுப்பைப் பயன்படுத்துதல் | | 11) சூழற் புதுமை |



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011
பகுதி - II
1மணி 15 நிமிடம்
கல்வி முரசு
வெளியீடு 24
இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.



**கீழ் வருவதை வாசித்துப் பொருத்தமான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

> மங்கையர்களே,
> ஆடவர்களே,
> கன்னியர்களே,
> காளையர்களே, உங்கள் கூந்தல் கன்னங்கரேலென்று வளர வேண்டுமா?
> நறுமணம் கமழ வேண்டுமா? அழகாக மிளிர வேண்டுமா?
> எங்கள் அசோக சிகைக்காய் பொடியை வாங்கிப் பாவித்துப் பயனடையுங்கள்
> எல்லா இடங்களிலும் கிடைக்கும்.
> அசோகா இன்டஸ்ரீஸ்
> பண்டாரவத்தை,
> கடவத்தை

01. மேலே காட்டப்பட்டுள்ளது.
    1) அழைப்பிதழ்    2) விளம்பரம்
    3) அறிவித்தல்    4) சுவரொட்டி

02. இதை வெளியிட்டவரின் நோக்கம்?
    1) எல்லோரது கூந்தல்களையும் பாதுகாத்தல்
    2) எல்லோருக்கும் அசோகா சிகைக்காய் பொடியைத் தெரியப்படுத்தல்
    3) அசோகா சிகைக்காய் பொடியின் விற்பனை அதிகரித்தல்
    4) எல்லோருக்கும் நன்மை செய்தல்

03. “கன்னியர்” என்னும் சொல்லின் எதிர்ப்பாற் சொல்லைப் பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

.................................................................................................

04. “கூந்தல்” என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

.................................................................................................

05. பெயர்ச்சொல் ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

.................................................................................................

06. “நறுமணம்” என்பதன் ஒத்த சொல்லை எழுதுக.

.................................................................................................

07. “பொடி” என்பதன் ஒத்த சொல்லை எழுக.

.................................................................................................

08. வினையெச்சச் சொல் ஒன்றை எழுதுக.

.................................................................................................

09. இதை வெளியிட்ட நிறுவனம் எது?

.................................................................................................

10. இந்த நிறுவனம் எங்கே அமைந்துள்ளது?

.................................................................................................

11. கூந்தல் என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் எது?

.................................................................................................

**இப்பாடலை வாசித்துச் சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

“தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
சாலைக்கு போ என்று சொன்னார் உன் அன்னை
சிலை போல ஏனங்கு நின்றாய்? - நீ
சிந்தா கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்?”

12. பிள்ளையைப் பாடசாலைக்குத் தயார்ப்படுத்தியவர் யார்?

..........

13. பாடசாலைக்குச் செல்ல விரும்பாத பிள்ளை எதற்கு ஒப்பிடப்படுகின்றது?

..........

14. இப்பாடல் ஆண் பிள்ளையையா? பெண் பிள்ளையையா குறிக்கின்றது?

..........

**கீழ்வரும் சொற்களைப் பன்மைச் சொல்லாக எழுதுக.**

15. போ :..........  16. சொன்னார் :..........

**கீழ்வரும் சொற்களின் எதிர்பாற்சொல்லை எழுதுக.**

17. அன்னை :..........  18. சிறுமி :..........

**கீழ்வரும் சொற்களின் ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

19. பூ :..........  20. நீ :..........

**விளையாடுதல், தொழில் செய்தல் போன்ற சந்தர்ப்பங்களில் பாடப்படும் பாடல் அடிகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் பாடப்படும் சந்தர்ப்பங்களின் பெயர்களைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே ..........

22. உலகத்து நாயகியே தேவி தேவி அம்மா தேவி தேவி
ஊழிக் கூத்து ஆடனணை மாரி தேவி ..........

23. காடுகள் பற்றைகள் வெட்டினோம் - பெரும்
கட்டைகள் தீக்கிரையாக்கினோம் ..........


24. பந்தெறித்தாட எல்லோரும்
பாங்குடனே வந்து சேருவோம் ..........

25. ஆண் பனையில் நுங்கே அணில் கோதா மாம்பழமே
கும்பிட்டு நான் கேட்பேன் குஞ்சரமே - கண்வளராய் ..........

26. சிறு நண்டு மணல் மீது படமொன்று கீறும்
சில வேளை அதைவந்து கடல்கொண்டு போகும் ..........

27. பவள மேனியான வயலில் நாற்றைப்
பாடி நட வாரும் தோழர்களே ..........


**சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

28. 

நிழற்றப்படாத பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக?

..........



29. 

இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பங்கு கீழ்வருவனவற்றுள் எது?

25/100  150/200  5/25  25/50

30. 999 999 என்னும் எண்ணைச் சொற்களில் எழுதுக.

..........

31. 1, 3, 6, 10 என்னும் கோலத்தில் 20 தாவது எண் எது?

..........

32. 25 கிராம் தேயிலை ரூபா 4.50 எனின் 110 கிராம் தேயிலையின் விலை என்ன?

..........

33. மீற்றர் ரூபா 70 படி 2.1/5 மீற்றர் வெள்ளைத் துணியும், டசின் ரூபா 48 படி 4 பென்சில்களும் வாங்கிய ஒருவர் ரூபா 200 தாள் காசு ஒன்றினைக் கொடுப்பின், கடைக்காரர் அவருக்குக் கொடுக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

..........

34. 5 மனிதர்களுக்கு 6 நாட்களுக்குப் போதுமான உணவு 3 மனிதர்களுக்கு எத்தனை நாட்களுக்குப் போதுமானது?

..........

35. 3 கிலோகிராம் நிறைகொண்ட கம்பியால் ஆன கூடு ஒன்றினுள் ஒரு கிலோகிராம் நிறைகொண்ட கிளியொன்று பறக்கிறது. அப்பொழுது இரண்டினதும் நிறை எவ்வளவு?

..........


36. சதுர வடிவான காணி ஒன்றைச் சுற்றிக் கம்பி வேலி இடப்படவுள்ளது. பக்கம் ஒன்றுக்கு 10 தூண்கள் தேவைப்படின் முழுமையாக எத்தனை தூண்கள் தேவைப்படும்?


..........

37. பண்டாரவின் வயது 14. சுமணதாச பண்டாரவிலும் 6 வயது மூத்தவன். ஆரியதாச சுமணதாசவிலும் 2 வயது இளையவன். ஆரியதாசவின் வயது என்ன?

..........

**கீழே தரப்பட்டுள்ள உருக்களை நன்கு அவதானித்து அட்டவணையில் உள்ள இடைவெளியில் எழுதப்பட வேண்டியதைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**





| | இயல்பு | உரு - I | உரு - II |
|---|---|---|---|
| 38. | விளிம்புகளின் எண்ணிக்கை | 12 | ? |
| 39. | உச்சிகளின் எண்ணிக்கை | ? | 4 |
| 40. | உச்சிகளின் எண்ணிக்கை | 6 | ? |
| 41. | பெயர் | சதுரமுகி | ? |
| 42. | ஒரு முகத்தின் பரப்பளவு $6cm^2$ எனின் மொத்தப் பரப்பளவு | 36 cm | ? |




# இங்கிலாந்தின் உயரமான பெண்

இங்கிலாந்தின் மிக உயரமான இளம்வயது பெண் என்ற பெருமையை 18 வயதான ஜெஸிக்கா பார்டோ பெற்றுள்ளார். இங்கிலாந்தின் மிக உயரமான கால்பந்தாட்ட வீரரான பீட்டர் குரோச்சை விட இவர் உயரமானவர். ஜெஸிக்கா 6 அடி 9 அங்குலம் உயரம் கொண்டவர். இவரது கவலை என்னவென்றால் தனது உயரத்திற்கு ஏற்ற ஆடை வாங்க முடியாதுள்ளதாம். மற்றும் தனக்கு விருப்பமான காலணியை அணிய முடியாதுள்ளதாம். இவருடைய காலணியின் அளவு 11 அடியாகும். எனவே இணையம் மூலம் தனக்கென பிரத்தியேகமாக காலணியை கொள்வனவு செய்கிறார். ஆனால் தனது உயரம் குறித்து இவர் பெருமைப்படுகிறார்.


இந்த உயரம் என்னை மேலும் பிரபலப்படுத்துகின்றது. இந்த வித்தியாசம் குறித்து நான் கவலைப்படவில்லை. இதனால் அதிக நன்மைகளே ஏற்படுகிறது. இந்த மாதம் இவர் கலந்து கொண்ட ஒரு நிகழ்வில் இவரை பெருமைப் படுத்தும்முகமாக இவருக்காக பேஸ்புக்பக்கம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். 'The 8 foot Girl At Wakestock 2011' என்ற பெயரைக்கொண்ட பேஸ்புக் பூக்கத்தில் இவருக்கு கிட்டத்தட்ட 4 ஆயிரம் ரசிகர்கள் உள்ளனர். ஜெஸிக்காவின் தாயான லிசா (41) 6 அடி உயரம் கொண்டவர். அதே வேளை அவரது தந்தை அனஷரூ (43) 6 அடி 7 அங்குலம் உயரம் கொண்டவர். இவர் 18 மாதக்குழந்தையாக இருக்கும் போது மற்ற குழந்தைகளை விட உயரம் கூடியவராக காணப்பட்டார் என்று அவரது பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

# மிகப்பெரிய சோதனை

1961 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ஆம் திகதி உலகின் மிகப்பெரிய Tsar Bomba குண்டு வெடிப்பு சோதனை நடத்தப்பட்டது. ஆர்டிக்கடல் பகுதியில் உள்ள Novaya Zemlya என்ற தீவுப்பகுதியில் தான் இந்த சோதனை நிகழ்த்தப்பட்டது. 57,000,000 தொன் nuclear கொண்டு உருவாக்கப்பட்டது. இந்த Tsar மொத்த எடை 27 தொன் ஆகும். 26 அடி நீளமும் 6.5 அடி சுற்றளவும் கொண்டதாகும். 34,500 அடி உயரத்தில் பறந்த விமானத்தில் இருந்து போடப்பட்ட இந்த குண்டு வெடித்த 3 நிமிடத்தில் 13,100 அடி உயரத்திற்கு வெப்பமும் புகையும் பரவியது. பூமியில் 300 பவுண்டுகள் அழுத்தம் ஏற்பட்டது. குண்டு வெடித்த போது ஏற்பட்ட ஒளி 1000 கிலோ மீற்றர் தொலைவு வரை மிகப்பிரகாசமாக தெரிந்தது.



# தலைமுடியில் சப்பாத்தா?



தலைப்பை பார்த்துவிட்டு சற்று வியப் படைந்திருப்பீர்கள் நீங்கள் தலைமுடியில் எப்படி சப்பாத்து செய்ய முடியும் என்று. ஆம் எம் மனிதர்களின் மூளை என்றால் சும்மாவா அதிலும் தேர்ச்சி பெற்று விட்டார் தாய்வான் நாட்டைச் சேர்ந்த ஒரு பெண். தாய்வானை சேர்ந்த Shiou-ying Tsai எனும் 54 வயதான பெண்மணியே இவ்வாறு தலைமுடிகளை சேகரித்து வைத்து பெண்களுக்கான அழகிய கீல் சப்பாத்துக்களை வமைக்கின்றார்.


# 32 விரல்களுடன்

கின்னஸ் சாதனை என்பது பெருமைக்குரிய விடயம் தான். இந்தியாவின் உத்தர பிர தேசத்தை சேர்ந்த , குழந்தை ஒன்றின் ஒவ்வொரு காலிலும் 10 விரல்கள் இருந்தன. ஒவ் வொரு கைகளிலும் 7 விரல்கள் இருந்தன. மொத்தம் 34 விரல்களுடன் குழந்தை பிறந்திருந்தது.

எடை குறைவாக பிறந்ததால் உடனடியாக சத்திரசிகிச்சை மூலம் கூடுதல் விரல்களை அகற்ற முடியாது என்று மருத்துவர்கள் கைவிரித்து விட்டனர்.

கால்களில் தலா 10 விரல்கள் இருப்பதால் குழந்தையால் நிற்க முடிய வில்லை. இதுகுறித்து மருத்துவர்கள் கூறியதாவது, இது மிகவும் அரிதான நோய். இதை பாலிடேக்டிலி என்று அழைப்பார்கள். பெரும்பாலும் பூனை, நாய்களை பாதிககக்கூடிய இந்நோய் மிக அரிதாகவே மனிதர்களையும் பாதிக்கிறது. இந் நோயால் பாதிக்கப்படுவர்களுக்கு கை, கால்களில் கூடுதலாக விரல்கள் இருககும். மற்ற உறுப்புகளில் எந்த பாதிப்பும் இல்லை. குழந்தை பிறந்து ஓராண்டுக்கு மேல் ஆகி விட்டதால் இப்போது சத்திரசிகிச்சை மூலம் கூடுதல் விரல்கள அகற்றலாம். கால்களில் விரல்களை வெட்டி எடுக்கும் சத்திரசிகிச்சை தானே என்று இதை சாதாரணமாக சொல்லி விடமுடியாது.

ஏனெனில் குழந்தை அக்ஷத்துக்கு கைகளில் கட்டை விரலே இல்லை. கூடுதல் விரல்களில் இருந்து தான் கட்டை விரலை மருத்துவர்கள் உருவாக்க வேண்டும். இதனால் இந்த சத்திரசிகிச்சை மருத்துவர்கள் கடுமையாகவே இருக்கும் என்கின்றனர்.



அதிக விரல்களுடன் பிறந்த குழந்தையாக கின்னஸ் சாதனை படைத்துள்ளான் அக்ஷத்.

# அதிசய கர்ப்பிணி

பிரித்தானியாவைச்சேர்ந்த கர்ப்பிணிப்பெண் ஒருவர் இரசாயனப் பொருட்களை உட்கொள்வதாகத் தெரிவிககப்படுகிறது. ஏழு மாத கர்ப்பிணியான குறித்த பெண் தளபாடங்களை சுத்திகரிப்பதற்காகவும், அழகுபடுத்துவதற்காகவும் பயன்படுத்தும் இரசாயனங்களை அதிகளவில் உட்கொள்வதாகக்குறிப்பிடப்படுகிறது. இந்த விசித்திரமான உணவுப்பழக்கம் வயிற்றில் இருக்கும் சிசுவை பெரிதும் பாதிக்கும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. பேர்மிங்ஷாமைச் சேர்ந்த 26 வயதான எமா வென்னிஸ் என்ற கர்ப்பிணிப்பெண்ணே இவ்வாறு விசித்திரமான உணவுப்பழக்கத்தை கொண்டுள்ளார். இந்த ஆபத்தான உணவுப்பழக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும் என ஒவ்வொரு நாளும் உறுதி பூணுவதாகவும், எனினும், அடக்க முடியாது ஆவலினால் மீண்டும் மீண்டும் இரசயானங்களை உட்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தளபாடங்களை சுத்திகரிப்பதற்காக பயன்படுத்தும் பூச்சுக்கள் உள்ளிட்ட இரசயானங்களை நேரடியாக உட்கொள்ளும் பழகக்த்தை கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. கருவுற்று சில மாதங்களின் பின்னர் இந்த விசித்திர ஆசை எழுந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எமாவின தாயாரும், அவரது தயாரும் கர்ப்ப காலத்தில் நிலக் கரியை உட்கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.



நள்ளிரவில் சில நேரங்களில் இரசாயனப்பொருட்களை உட்கொள்ள வேண்டிய உணர்வு தோன்றும் எனவும் உடனடியாக சென்று தளபாட சுத்திகரிப்பு பொருட்களை உட்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த உணவுப்பழக்கம் ஆபத்தானது எனவும் உடனடியாக மருத்துவர்களின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ஓடியோ செய்தியை எழுத்துக்களாக மாற்றிக் கொடுக்கும் தளம்

இதில் வாய்ஸ்மெயிலை (Voice Mail) -ஐ படிக்ககக்கூடிய(Readable Text) ஆக மாற்றிக்கொடுக்க YAP Voicemail என்ற அப்ளிகேசன் உதவுகிறது. தட்டச்சு செய்ய நேரம் இல்லாத நிலையில் நாம் சொல்ல வேண்டிய செய்தியை வாய்ஸ்மெயிலாக மாற்றி அனுப்புவோம். இப்படி நாம் அனுப்பும் மற்றும் பெறும் வாய்ஸ்மெயில் செய்தியை படிக்கக்கூடிய செய்தியாக மாற்றத்தான் இந்த லுயீ அப்ளிகேசன் உதவுகிறது.

இத்தளத்திற்கு சென்றவுடன் தோன்றும் விண்டோவில் ஐபோனில் வேண்டும் என்றால் Available on the App Store என்பதிலும், ஆண்டிராய்டு என்பதில் வேண்டும் என்றால் Available on the Android Market என்பதையும் சொடுக்கி Yap Voicemail நிறுவலாம். இனி உங்களுக்கு இதை எப்படி பயன்படுத்த வேண்டும் என்ற கடினம் இல்லாமல் நமக்கு வரும் ஓடியோ செய்தியை அப்படியே படிக்கக்கூடிய செய்தியாக இந்த அப்ளிகேசன் மாற்றிக்கொடுக்கிறது.


தரவிறக்க சுட்டி:- http://yapinc.com/voicemail.html a

கணினி மூலை

## இந்தியச் செய்திகள்

# பத்மநாத கோயில் பொக்கிஷங்களை இரும்புக் கதவு அமைத்து பாதுகாக்கவும்

## உயர் நீதிமன்றம் உத்தரவு



(புதுடில்லி)

பத்மநாப சுவாமி கோவில் பாதாள அறை பொக்கிஷங்களை பாதுகாக்க இரும்புக் கதவுகள் அமைக்கப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கேரள தலைநகர் திருவனந்த புரத்தில், பிரசித்தி பெற்ற பத்மநாப சுவாமி கோவில் உள்ளது. இக்கோவிலின் பாதாள அறைகளில், ஒன்றரை இலட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் மதிப்புள்ள பொக்கிஷங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இப்பொக்கிஷங்களை பாதுகாக்க, மாநில அரசு சிறப்பு பொலிஸ் ஏற்பாடு செய்துள்ளது.

பாதாள அறைகளில் பாதுகாக்கப்பட்டுள்ள பொக்கிஷங்களுக்கு மேலும் பாதுகாப்பாக இருக்க, இரும்புக் கதவுகள் கொண்டு உறுதி மிக்க அறைகள் அமைகக வேண்டும்.

பல நூற்றாண்டுகளாக பயன் படுத்தப்படாமல் இருக்கும் பொக்கிஷங்களை வெளியே எடுக்கும்போது, ஏதாவது மாறறங்கள் ஏற்படுகிறதா என்பதை அறிய, வல்லுனர்களை கமிட்டியினர் உதவிக்கு அழைக்கலாம்.

கோவிலில் பாதாள அறைகளில் ஏ, சி, டி, இ, எப், என ஐந்து அறைகள் ஏறகனவே திறக்கப்பட்டு, அவற்றில் உள்ளவை குறித்து ஆய்வு செய்யப்பட்டு விட்டது.

ஆனால், இரண்டாவது அறையான பி அறை மட்டும் இதுவரை திறக்கப்படாமல் உள்ளது. மேலும், இவ்வறையை மறு உத்தரவு வரும் வரை திறக்க வேண்டாம் என மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சுரங்க ஊழல் நிரூபிக்கப்பட்டால் அரசியலிலிருந்து விலகத் தயார்


## கர்நாடக முதல்வர் எடியூரப்பா சவால்

(பெங்களூர்)

சுரங்க ஊழலில் எனக்குத் தொடர்புள்ளது என்று நிரூபிக்கப்பட்டால், முதல்வர் பதவியை இராஜினாமா செய்வது மட்டுமின்றி, அரசியல் துறவறம் மேற்கொள்வேன். லோக் ஆயுக்தா அறிக்கை தாக்கல் செய்யும் வரை மவுனமாக இருப்பேன் என்று முதல்வர் எடியூரப்பா கூறினார்.

விதான் சவுதாவில், தன் அமைச்சர்களுடன் முதல்வர் எடியூரப்பா நிருபர்களைச் சந்தித்தார்.

அங்கு அவர் கூறியதாவது: தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட்டதாகக் கூறும் லோக் ஆயுக்தா நீதிபதி சந்தோஷ் ஹெக்டே, முன்னாள் முதல்வர் குமாரசாமி ஆகியோர், முன்பே புகார் கொடுத்திருக்க வேண்டும். இது குறித்து விசாரிக்க பிரதமர் மன்மோகன் சிங், மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளேன்.



என் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் உண்மையா என்பது குறித்து பா.ஜ., மேலிடத் தலைவர்கள் கொண்ட குழுவை அமைத்து விசாரிக்கலாம் என, தேசியத் தலைவர் நிதின் கட்காரிக்கு கடிதம் அனுப்பியுள்ளேன்.

என்மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டால், நான் முதல்வர் பதவியை ராஜினாமா செய்வதுடன், அரசியல் துறவறம் மேற்கொள்வேன் என்றார்.

# 14 ஆண்டுகளாக நடந்த வழக்கில் திருமாவளவன் விடுதலையானார்



(சிதம்பரம்)

சேத்தியாத்தோப்பு அருகே பொதுக் கூட்டத்தில், வன்முறையைத் தூண்டும் வகையில் பேசியதாக திருமாவளவன் மீது தொடர்ந்த வழக்கில், குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாததால் விடுதலை செய்யப்பட்டார்.


கடலூர் மாவட்டம், சேத்தியாத் தோப்புக்கு அடுத்த குமாரகுடியில், 1997 இல், அம்பேத்கர் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் நடந்தது. அதில் பங்கேற்ற வி.சி., கட்சித் தலைவர் திருமாவளவன், அரசுக்கு எதிராகவும், வன்முறையை தூண்டும் வகையிலும் பேசியதாக, சோழத் தரம் பொலிஸார் வழக்கு பதிந்தனர். இவ்வழக்கு விசாரணை, சிதம்பரம் சப்-கோர்ட்டில், 14 ஆண்டுகளாக நடந்து வந்தது.

கடந்த மே மாதம், திருமாவளவன் ஆஜராகாததால், பிடிவாரன்ட் பிறப்பிக்கப்பட்டது.

இதையடுத்து, கடந்த 16 ஆம் திகதி, சிதம்பரம் கோர்ட்டில் திருமாவளவன் எம்.பி., ஆஜராகி விளக்கம் அளித்தார். இதைத் தொடர்ந்து, வழக்கின் தீர்ப்பு நேற்றுமுன்தினம் கூறப்பட்டது. அதில், குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை எனக் கூறி, திருமாவளவனை விடுதலை செய்து, நீதிபதி திருநாவுக்கரசு தீர்ப்புக் கூறினார்

# பிரதமர், உள்துறை அமைச்சரை சிக்க வைப்பதற்கு முயலவில்லை

## தனது கருத்தை மாற்றினார் ராசா



(புதுடில்லி)

பிரதமர் மன்மோகன் சிங் கையோ, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத் தையோ சிக்க வைக்க வேண்டும் என்று தாம் ஒருபோதும் கருதியதில்லை என்று முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசா தெரிவித்தார்.

முன்னதாக நேற்றுமுன்னதிம் அவரது சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான வழக்கறிஞர் சுசீல்குமார், பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அப்போதைய நிதி அமைச்சர் ப.சிதம்பரத்தின் ஒப்புதலுடனேயே 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு நடைபெற்றதாகத் தெரிவித்திருந்தார்.

எனினும் நேற்று திடீரென ராசா தனது நிலையை மாற்றிக்கொண்டுள்ளார்.

2 ஜி வழக்கில் பிரதமரையோ, ப.சிதம்பரத்தையோ குற்றஞ்சாட்டவில்லை. ஊடகங்கள்தான் தவறாக செய்தி வெளியிட்டுவிட்டன என்று அவர் தெரிவித்தார்.

ஊடகங்கள் என்னிடம் இருந்து வார்த்தைகளை வரவழைக்க முடியாது. அவர்களை உண்மையாக செய்தி வெளியிடச் சொல்லுங்கள் அல்லது நீதிமன்றத்தில் இருந்து அவர்களை வெளியேற்றுங்கள் என்று ராசா கோபமாகக் கூறினார்

# இலங்கையிலுள்ள தமிழர்களுக்காக நாடாளுமன்றிலும் தீர்மானம் வேண்டும்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம்

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்காக நாடாளுமன்றத்திலும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநிலச் செயலர் தா. பாண்டியன் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசால் 2008 இல் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப் பின்படி உள்நாட்டுப் போர் நடைபெற்ற இடங்களில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் தமிழர்களைக் காணவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

கடைசியாக நடைபெற்ற போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. சபையால் நியமிக்கப்பட்ட குழுவின் முதல் கட்ட அறிக்கை கூறுகிறது. இது ஒரு அப்பட்டமான இன அழிப்பு போர்க் குற்றமாகும். உலக அளவில் மனித உரிமை பிரச்சினையாக எழுந்துள்ளதற்கு இங்கிலாந்து, ஆவுஸ்ரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆனால் இந்தியா மட்டும் மௌனம் சாதிக்கிறது. இது பலத்த சந்தேகங்களை உருவாக்கியுள்ளது. இந்திய வெளியுறவுக் கொள்கையின் தோல்வியாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட இலங்கைப் பிரச்சினையும் ஒரு காரணமாகும். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள முதல்வர், தமிழக மக்களின் உணர்வுகளுக்கு வடிவம் கொடுக்கும் விதத்தில் சட்டப் பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்.

இந்த உணர்வை மதிக்கும் வகையில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கைத் தமிழ் மக்களுக்கான தீர்மானத்தை நாடாளுமன்றத்திலும் நிறைவேற்ற வேண்டும் என்று தா. பாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.



தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சென்னை தலைமைச் செயலகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆர்.பரதன், ராஜா உட்பட முக்கிய பிரமுகர்கள் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதைக் காணலாம்

# நோர்வே தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் பேரணிகள்



(ஒஸ்லோ)

நோர்வேயில் நடத்தப்பட்ட இரட்டை தாக்குதல்களில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் பொருட்டு நாடளாவிய ரீதியில் பாரிய பேரணிகள் இடம்பெற்றுள்ளன.

தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்ற பேரணியில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட நோர்வே பிரஜைகள் கலந்து கொண்டதாக முடிக்குரிய இளவரசர் ஹாக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்ட போதிலும், பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தத் தாக்குலல்களில் 93 பேர் உயிரிழந்ததாக இதற்கு முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த எண்ணிக்கை 76 எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பேரணியில் கலந்துகொண்ட பலர் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் நினைவாக பூக்களை உயர்த்திய வண்ணம் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனநாயகம், ஒற்றுமை மற்றும் பொறுமைக்கான பேரணியாக இது அமைந்துள்ளதாக நோர்வே பிரதமர் ஜென்ஸ் ஸ்ரொல்டன்பேர்க் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பிரதமர் தலைமையில் உயிரிழந்தவர்களுக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதாக அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்தத் தாக்குதல்களை நடத்தியதாக ஏற்றுக்கொண்ட அன்டேர்ஸ் பெஹ்ரிங் ப்ரீவிக் என்ற நபர் எட்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், முதல்முறையாக நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட ப்ரிவிக்கிற்கு சட்டத்தரணியை தவிர ஏனையவர்களுடன் தொடர்புகொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## உலகச் செய்திகள்

# அமெரிக்கா நிராகரிப்பு

ஈரானின் விஞ்ஞானி கொல்லப்பட்டமைக்கு தமது நாடு பின்புலத்தில் செயற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

அணுத்திட்டம் தொடர்பான கவனத்தை திசைதிரும்பும் நோக்கத்திற்கான இந்த விடயத்தைப் பயன்படுத்த வேண்டாம் என ஈரானை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

35 வயதான பல்கலைகழக விரிவுரையாளர் ஒருவர் தெஹ்ரானின் கிழக்குப் பகுதியில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கடந்த சனிக்கிழமை கொல்லப்பட்டிருந்தார்.

இவர் ஒரு அணு விஞ்ஞானி என ஊடகங்கள் குறிப்பிட்டுள்ள போதிலும், ஈரானின் பிரதி உள்விவகார அமைச்சர் இதனை நிராகரித்துள்ளார்.

இதேவேளை இந்தக் கொலைக்கு அமெரிக்காவே காரணம் என ஈரானின் நாடாளுமன்ற சபாநாயகர் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில் அமெரிக்கா இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

# புதிய அரசியல் கட்சிகளை அமைக்க சிரிய அமைச்சரவை அனுமதி

(டமஸ்கஸ்)

சிரியாவில் புதிய அரசியல் கட்சிகளை அமைப்பதற்கான சட்டத்துக்கு அந்த நாட்டு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திரம் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்த சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு அரச ஊடகம் குறிப்பிட்டுள்ளது.


1963 ஆம் ஆண்டு இராணுவ சதிப் புரட்சியின் பின்னர் ஆளும் கட்சியால் தடை செய்யப்பட்ட எதிர்த்தரப்பினர். இந்தச் சட்டத்தின் அடிப்படையில் கட்சிகளை உருவாக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. சிரியாவில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் கடந்த நான்கு மாதங்களாக இடம்பெற்றுவரும் நிலையில், பஷார் அல் அசாட்டின் அரசாங்கம் இந்தச் சட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

# சீனா சாதனை

(பீஜிங்)

கடலுக்கடியில் 3 மனிதர்களுடன் சுமார் 5057 மீற்றர் ஆழம் வரை நீர்மூழ்கியை இயக்கி சீனா சாதனை படைத்துள்ளது. ஜியோலாங் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த நீர்மூழ்கி, பசிபிக் கடலின் மிக ஆழமான பகுதியில் சோதனை செய்து பார்க்கப்பட்டது. இதில் நீர்மூழ்கியை சுமார் 5057 மீற்றர் ஆழம் வரை இயக்கி சீனா சாதனை படைத்துள்ளது. இதுவரை அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளே, 3500 மீற்றர் ஆழத்திற்கும் கீழே நீர்மூழ்கிகளை இயக்கி சாதனை படைத்த நாடுகள் என்பது குறிபபிடத்தக்கது. சீனா இந்த வரிசையில் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

# Mad Max





"Mad Max" என்ற ஒரு அவுஸ்ரேலியத் திரைப்படம் உலகெங்கும் பிரபலமாக இருந்தது ஒரு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு. ஒரு மலிவு விலைப் படம், திடீரெனப் பிரபலமாகி எடுத்தவர்களுக்கு தங்கச் சுரங்கமாயிற்று. மெல் கிப்ஸன் என்ற நடிகர் இதனால் உலகத் திரைகளில் பிரபல நட்சத்திரமாகி, புகழால் தலையை இழந்து தீவிர மத வெறியராகி, பின் யூதர்களை இழித்துப் பேசி வெறுப்பவராகி, என்னென்னவோ பிரச்சினைகளில் சிக்கி தான் ஒரிஜினல் 'Mad' போன்றவனே என்று நிரூபித்துவிட்டார். இந்த மாக்ஸ் படத்தின் கரு, பெட்ரோலிய எண்ணெய் எல்லாம் தீர்ந்த உலகில் வாழ்க்கை மறுபடி புராதன தொழில் முறைகளுக்குத் திரும்புகிறது. நகரங்கள் அழிந்து எல்லாம் பழைய 'காட்டுத் தனமான' வாழ்க்கைக்குத் திரும்புவதில் சிலர் மட்டும் கொஞ்சம் எண்ணெயைப் பதுக்கி வைத்துக் கருப்புச் சந்தையில் கொள்ளை அடிக்கிறார்கள். உலகெங்கும் குற்றக் கூட்டங்களே ஆள்கின்றன. அவர்களிடையே போர்.

இன்று உலகெங்கும் பைத்தியக்காரன் மாக்ஸ் படத்தில் வரும் குற்றக் கூட்டங்களைப் போலவே அழிப்பை நோக்கமாகவும், செயல்திட்டமாகவும் கொண்ட திறமைசாலிகள் தகவல் வலை அமைப்பைப் பயன்படுத்தி நிறுவனங்களைத் தாக்கி செயலிழக்கச் செய்ய முயல்கின்றனர். 'பெயரிலி' (அனானிமஸ்) என்ற ஒரு அமைப்பு வங்கிகள், பெண்டகன் (அமெரிக்க ராணுவத்தின் தலைமையகம்) போன்றனவற்றைத் தாக்கிப் புகழ் பெற்றிருக்கிறது. சமீபத்தில் இன்னொரு கும்பலான லூட்ஸெக் என்பது தன் பங்குக்கு சிடி வங்கி, சோனி போன்ற நிறுவனங்களைத் தாக்கி இருக்கிறது. மாக்ஸ் படம் மேலும் எதார்த்தமாகிறதற்கு ஒரு சான்று, இந்த லூட்ஸ் கும்பல், பெயரிலி கும்பலையும் தாக்கி இருக்கிறது. இந்த தளத்தில் மேலதிக தகவல்களைப் பாருங்கள்.

http://latimesblogs.latimes.com/technology/2011/06/lulzsec-anonymous-cyber-fight.html

# ஹேக்கர்களிடம் சிக்கித் திணறிய சி.ஐ.ஏ




சி.ஐ.ஏ. என்றால் ஏதோ முள்ளம்பன்றி போலச் சிலிர்த்துக் கொண்டு உடலெங்கும் ஆயுதமாக நிற்கும் ஒரு அமைப்பு என்று நம் கற்பனை வளர்ந்திருக்கிறது. இன்னொரு பக்கம் அது என்னவென்றே காணப்பட முடியாத இரகசிய இருட்டு நிறுவனம் என்றும ஒரு கருத்து உலவுகிறது. ஆனால் அதுவும் பல அமெரிக்க ஸ்தாபனங்களைப் போலத் தொடர்ந்து பொதுமக்களிடம் தன் அலுவல்கள் பற்றி ஏதோ ஒரு நீர்த்த வடிவிலாவது தகவல்களைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. அப்படி ஒரு தகவல் தளத்தை, சில தகவல் துறையில் வல்லமை பெற்ற, ஆனால் முகம் மறைந்து வாழும் சிலர், தாக்கி அழித்து, சில மணி நேரமாவது செயற்பட விடாமல் செய்திருக்கிறார்களாம். இதே கூட்டம்தான் சோனி கம்பெனியின் ஆவணங்களில் இருந்து பல மில்லியன் பேரின் கடனட்டை விவரங்களைத் திருடியது. சமீபத்தில் சிடி வங்கியிலிருந்தும் தகவலைத் திருடியதும் இவர்களே. இன்னும் பே பால் போன்ற பல நிதி நிறுவனங்களை இவர்கள் தாக்கி இருக்கிறார்கள். இப்படி பல நாடுகள் மீதும் தாக்குதல் நடத்த ஒரு பட்டாளம் பல்கலை மாணவர்களைச் சீன இராணுவம் தயாரித்து வருகிறது. இந்த சி.ஐ.ஏ.வின் பொதுமக்கள் தொடர்புத் தளத்தைத் தாக்கியது அனேகமாக அமெரிக்கா யூரோப்பியர்களாகத்தான் இருக்க வாய்ப்பு அதிகம். மேலும் தகவல்களை இங்கு பாருங்கள்.

http://www.huffingtonpost.com/2011/06/15/cia-website-lulzsec-hackers_n_877812.html




உலகின் பெரும் ஆயுதத் தயாரிப்பாளரும், ஏற்றுமதியாளருமான அமெரிக்காவின அரசு ஏகப்பட்ட ஓட்டைகள் நிறைந்த ஒன்று. விக்கி லீக்ஸ் பெரியதொரு உதாரணம். ஒரு புறம் பாகிஸ்தான் நம்பத்தகாத கூட்டாளி என்று பகிரங்கமாக அறிவித்துக் கொண்டே, இன்னொரு புறம் பாகிஸ்தானுக்குப் பில்லியன் பில்லியனாகச் செலவில் பெரும் ஆயுதங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எத்

# அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் அதிகாரம்

தனை அறிவு, என்ன ஒரு சாமர்த்தியம்! சொந்தச் செலவில் சூனியம் வைப்பது என்பார்களே அதேபோல சொந்தச் செலவில் தன் வீட்டுக்கே கொள்ளி வைத்துக் கொள்ளுகிறதா அமெரிக்க அரசு, அல்லது ஆசியாவில் இந்தியாவும் சீனாவும் வலிமை பெற்றுவருவதை அறிந்து, பிராந்திய ஸ்திரத்தன்மையைக் குறைப்பதற்கு பாகிஸ்தானை வளர்த்து வருகிறதா? இலங்கை மீதான அமெரிக்காவின் சமீபத்திய ஈடுபாடுகளும் அதன் ஆசியப் பயத்தை உணர்த்துவதாகவே இருக்கின்றன. ஆசியாவின் அதீத சனத்தொகையும் அமெரிக்க வெள்ளையரைக் கலவரப்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது. ஆசியாவில் யுத்தம் மூலம் சனத்தொகையைக் குறைத்து, வெள்ளையரின் உலக ஆதிபத்தியம் நிலைநிற்க கணக்குப் போடுகிறதா அமெரிக்கா? தகவலுக்கு இக்கட்டுரையைப் பாருங்கள். **http://www.wired.com/dangerroom/2011/06/youre-still-buying-spy-gear-for-the-pakistanis/**

# முதலைகளை அழித்த தேரை



என்ன ஒரு அதிசயமான விடயம் இது. தேரைகள் அவுஸ்ரேலியாவில் சில பகுதிகளில் பெரும் நன்னீர் முதலைகளை, கடும் விஷப் பாம்புகளை எல்லாம் 90 சத வீதம் அழித்து விட்டனவாம். இந்தத் தேரைகள் அவுஸ்ரேலியாவின் இயற்கையான வாசிகள் அல்ல. மழைக்காடுகளில், தென்னமெரிக்காவில் இருந்த இந்தத் தேரைகளை அவுஸ்ரேலியாவில் கரும்பை அழித்த சாம்பல் நிற வண்டுகளைத் தின்னும் என்று கருதி அவுஸ்ரேலியாவில் கொண்டு வந்து நுழைத்தனராம். தேரைகள் வண்டுகளைத் தின்னவில்லை. மாறாக தம் இயல்பான நிலத்துக்கு நேரெதிரான தட்ப வெப்ப நிலை கொண்ட அவுஸ்ரேலியாவில், அதன் அனேகமாக உலர்ந்த சீதோஷ்ணத்தையும் அலட்சியம் செய்யாமல், பெரிதும் வளர்ந்து நாடெங்கும் பரவியதோடு அல்லாமல், அவற்றுக்கு எதிரிகள் யாரும் இல்லாததால் இன்று அவுஸ்ரேலியாவின் பெரும் பிரச்சினையாகி இருக்கின்றன. மேலும் விசித்திரமும், அற்புதமும் நிறைந்த பல தகவல்களுக்குக் கட்டுரையைப் படியுங்கள். கட்டுரையில் ஒரு வீடியோவும் உள்ளது, அதையும் பாருங்கள்.

**http://www.guardian.co.uk/environment/2011/jun/16/cane-toad-conquest-australia**

# இனவாதக் கட்சிகளும், சிங்கள மக்களும் தமிழர் வழங்கிய தீர்ப்பை புரிதல் வேண்டும்

## -புளொட் தலைவர் கூறுகிறார்-

(கொழும்பு)

**உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பினை இனவாதக் கட்சிகளும் சிங்கள மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்று புளொட் அமைப்பின் தலைவரும் முன்னாள் எம்.பி. யுமான தர்மலிங்கம் சித்தார்த்தன் வலியுறுத்தியுள்ளார்.**

அரசியல் தீர்வை வழங்க வேண்டுமென்ற சர்வதேசத்தின் அழுத்தத்திற்கு தமிழர்களின் தீர்ப்பானது உந்து சக்தியாக அமைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். உள்ளூராட்சி சபைத் தேர்தல் பெறுபேறுகள் தொடர்பாக கருத்துத் தெவிக்கையிலேயே புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெவிக்கையில்: உரிமைகள், அரசியல் தீர்வை வழங்க வேண்டுமென்பதிலேயே தமிழ் மக்கள் அக்கறை காட்டியுள்ளனர். இதனை அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளான இனவாத ரீதியில் சிந்திக்கும ஜாதிக ஹெல உறுமய மற்றும் அமைச்சர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி போனறவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கம் மட்டுமல்ல, தென்பகுதி பெரும்பான்மை இன மக்களும் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க வேண்டுமென அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன. இந்த அழுத்தத்திற்கு தமிழ் மக்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வழங்கிய தீர்ப்பு மேலும் உந்து சக்தியாக அமைந்துள்ளது.



# உள்ளூராட்சிமன்ற தலைவர்களின் பெயரை உடன் அனுப்பி வைக்குமாறு அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களினது பெயர்களை நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வெற்றிபெற்ற கட்சிகளின் செயலாளர்களிடம் தேர்தல்கள் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

மேயர், உப மேயர், தலைவர் மற்றும் உப தலைவர் ஆகிய பதிவிகளுக்காக நியமிக்கப்படும் நபர்களின் பெயர்களை கட்சிகளின் செயலாளர்கள் ஊடாக தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிளியூ.பி.சுமனசிறி குறிப்பிட்டார்.

அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுபவர்களின் பெயர்களையும் அனுப்பி வைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களினதும் பெயர்கள், எதிர்வரும் இரண்டு தினங்களுக்குள் தேர்தல்கள் செயலகத்திற்கு கிடைக்கும் என டபிள்யூ.பி.சுமனசிறி தெரிவித்தார்.

இதன்பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களினதும் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை, இந்தவார இறுதியில் வெளியிட முடியும் என எதிர்பார்ப்பதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் கூறினார்.

# வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக் கொள்கின்றதாம் ஜாதிக ஹெலஉறுமய

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கொள்கை ரீதியாக புறக்கணிக்கின்றோம் என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்தது.

கூட்டமைப்பின் வெற்றி யின் ஊடாக தேர்தல் நியாயமானதாகவும் நீதியானதுமாக நடைபெற்றுள்ளது என்பது உறுதியாகின்றது. அரச வளங்கள் மற்றும் இர்ாணுவம் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டு போலியானது என்பதுவும் வெளிப்பட்டுள்ளதாகவும் அக் கட்சி குறிப்பிட்டது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளரும் ஊடகச் செயலாளருமான நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க கூறுகையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்ட ஜாதிக ஹெல உறுமயவின் வேட்பாளர்கள் 7 பேர் வெற்றி பெற்றுள்ளனர். இதற்காக பொது மக்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

எவ்வாறாயினும் உள்நாட்டில் மாத்திரமல்லாது சர்வதேசத்திலும் மிகவும் ஆர்வத்தோடு எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள் தான் வடக்கு மற்றும் கிழக்கு உள்ளூராட்சி சபை முடிவுகளாகும்.

வடக்கு கிழக்கில் அரசாங்கம் பின் தள்ளப்பட்டுள்ளதுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டியுள்ளது. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பை கௌரவிக்கின்றோம். அம்மக்களின் ஜனநாயக உரிமை முழுமையாக வெளிப்பட்டுள்ளதுடன் தமது பிரதிநிதிகளை சுதந்திரமாகவும் தெரிவு செய்துள்ளனர். எனவே வடக்கில் தேர்தல் மோசடிகள் நடைபெற்றதாக யாரும் கூற முடியாது. கூட்டமைப்பினரைப் பொறுத்தவரையில் பிரிவினை வாதத்துடன் செயற்படுபவர்களாவர். ஐக்கிய இலங்கையை துண்டாடும் சக்திகளை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே கொள்கை ரீதியாக கூட்டமைப்பை புறக்கணிக்கின்றோம்.

உள்ளூராட்சி சபைகளில் பொதுமக்களுக்காகவும் அப்பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் மாத்திரமே கூட்டமைப்பு செயற்பட வேண்டும். பிரிவினை வாதத்தைத் தூண்டி விட்டு மக்களை அழிவுப் பாதையில் இட்டுச் செல்லக் கூடாது என்றார்.

## எதிர்க்கட்சியாக வளரும் பிரஜைகள் முன்னணி வடக்கில் அகலக் காலூன்றுமாம்



(கொழும்பு)

ஐ.தே.க போன்ற பழம் பெரும் கட்சிகள் வடக்கில் சகல உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிட்டு இரண்டு உறுப்பினர்களை மட்டுமே பெற்றுள்ள நிலையில் பிரஜைகள் முன்னணி புதிய கட்சியாக துணுக்காய் பிரதேச சபையில் எதிர்க் கட்சியாக செயற்படக் கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது என முன்னணியின் தலைவர் ஜே. சிறீரங்கா எம்.பி. தெரிவித்தார்.

பிரஜைகள் முன்னணி கட்சி தனி ஒரு கட்சியாக வடக்கு, தெற்கு, கிழக்கு பகுதிகளில் தொடர்ந்தும் போட்டியிட்டு வருகிறது. எந்தவொரு கட்சியுடனும் இணையாமல் தனி ஒரு கட்சியாக ஆரம்பிக்கப்பட்டதே பிரஜைகள் முன்னணி கட்சி என கட்சியின் தலைவர் ஜே.சிறீரங்கா மேலும் தெரிவித்தார்

## தெய்வீக இசை விருந்து

(யாழ்ப்பாணம்)

உலகப்புகழ் பெற்ற பிரபல இந்திய பாடகரும் பகவான் பாபாவின் பக்தருமான ஸ்ரீ ரவி ராஜ் தசேறி வழங்கும் தெய்வீக இசை விருந்து எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சேர்பொன் இராமநாதன் வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் சத்தியன் குழுவினரின் பின்னணி இசையில் தெய்வீக இசை விருந்து இடம்பெறவுள்ளது.

## 36 உள்ளூராட்சி சபைத் தேர்தலை வருட இறுதியில் நடாத்த ஏற்பாடு

(கொழும்பு)

எஞ்சியுள்ள 36 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை இந்தவருட இறுதிக்குள் நடாத்தவுள்ளதாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்துள்ளார். 335 உள்ளூராட்சி சபைகளில் 234 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் கடந்த மார்ச் மாதத்தில் நடத்தப்பட்டது. எஞ்சிய 101 உள்ளூராட்சி சபைகளில் 67 சபைகளுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு கொழும்பு மேல்நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து 65 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுகளை ஏற்றுக்கொள்ளுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை 65 சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றது. அத்துடன் இரு சபைகளுக்கான தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் எஞ்சியுள்ள 36 சபைகளுக்கான தேர்தல் இவ்வருட இறுதிக்குள் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முக்கியமான இரண்டு செய்திகளை வடக்கு தேர்தல் வெளிப்படுத்தியுள்ளது

## என்கிறார் அமைச்சர் டிலான்



(கொழும்பு)

வடக்குத் தேர்தல் முடிவுகளானது முக்கியமான சில செய்திகளை விடுத்துள்ளது.

அதாவது தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை விடுத்து ஆளும் கட்சியுடனேயே பேச்சுக்களை நடாத்த வேண்டும் என்று கூட்டமைப்புக்கு ஒரு செய்தியையும் அபிவிருத்தி மட்டுமின்றி தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் வகையிலான அரசியல் தீர்வை விரைவாக முன்வைக்க வேண்டும் என்ற செய்தியை அரசாங்கத்துக்கும் வடக்கு மக்கள் விடுத்துள்ளனர் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

நான் வல்வெட்டித்துறை உள்ளூராட்சி மன்றத்துக்கு ஆளும் கட்சி சார்பில் பொறுப்பாக செயற்பட்டேன். 1000 வாக்குகள் வல்வெட்டித்துறையில் ஆளும் கட்சிக்கு கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் 679 வாக்குகளே கிடைத்தன. எனினும் வடக்கு மக்களின் தீர்ப்பை நாங்கள் ஏற்கின்றோம் எது எவ்வாறெனினும் வடக்கில் ஜனநாயகம் பாரிய வெற்றியை பெற்றுவிட்டது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு விவசாயிகளுக்கு உப பயிர்ச்செய்கைக்கு விதைகள் வழங்கல்

(கொழும்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உப பயிர்ச் செய்கைக்காக ஒரு இலட்சத்து 85 ஆயிரம் கிலோகிராம் விதைகளை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் கீழ் 50 ஆயிரம் பயறு விதைகள், 75 ஆயிரம் கிலோகிராம் மரமுந்திரிகை விதைகள் மற்றும் 50ஆயிரம் கிலோகிராம் உழுந்து விதைகளை இறக்குமதி செய்யவுள்ளதாக அமைச்சின் செயலாளர் கே.ஈ. கருணாதிலக குறிப்பிட்டார்.

அத்துடன் 10ஆயிரம் கிலோகிராம் கௌப்பி விதைகளும் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இந்த விதைகள் விவசாய திணைக்களத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த விதைகளை அடுத்த மாதமள வில் இலவசமாக வழங்கவுள்ளதாக செயலாளர் கூறினார்.

இந்த விதைகளின் தரம் குறித்து விவசாயத் திணைக்களம் உறுதிப்படுத்துமென செயலாளர் கே.ஈ. கருணாதிலக குறிப்பிட்டார்

## தமிழ் மொழியைக் கற்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

தமிழ் மொழியில் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பொலிஸார் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென நீதிவான் உத்தரவிட்டதாக திருகோண மலை பொலிஸ் அத்தியட்சகர் பந்துல விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழி அக்கடமி ஆரம்ப நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் மொழியில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டால் அதனை மக்களும் புரிந்து கொள்வார்கள்.

போதியளவு மொழியறிவு இல்லாத காரணத்தினால் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

# இந்திய - இலங்கை நல்லுறவு மேலும் வலுவடையும் வாய்ப்பு

## காங்கேசனில் இந்தியத் தூதுவர்



(யாழ்ப்பாணம்)

இலங்கை - இந்திய நல்லுறவை மேம்படுத்தும் ஸ்திரத் தன்மையுடனான செயற்பாடாக காங்கேசன்துறை துறைமுகப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஆரம்பித்து வைக்கப்படும் இப் புனரமைப்புப் பணிக்கான ஒப்பந்தம் கைச்சாத்தாகி 5 தினங்களுக்குள் இப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் `அசோக் கே காந்தா தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 1.00 மணியளவில் இடம்பெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்தியா தனது அயல்நாடான இலங்கையுடன் என்றுமே நல்லுறவைப் பேணி வருகிறது. இந்த நல்லுறவின் அடித்தளமாக துறைமுகப் புனரமைப்புப் பணிகளை இந்திய அரசாங்கம் மேற்கொண்டு வருவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு மேலும் வலுப்படுத்தப்படுகிறது.

துறைமுகப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் கடந்த 21 ஆம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. 5 ஆவது நாளான நேற்று இப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், தொடர்ந்து புனரமைப்பு வேலைகள் நடைபெறும்.

துறைமுகப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பதாக அதற்கான ஆழ்கடல் தொடர்பான அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இத்துறைமுகம் புனரமைக்கப்படுவதன் மூலம் வடக்கிற்கும் தெற்கிற்குமான பொருளாதார அபிவிருத்திகள் மேம்படுவதுடன், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக உறவுகளும் மேம்படுத்தப்படும்.

ஏ-9 பாதை பூட்டப்பட்டிருந்த காலத்தில் இத்துறைமுகத்தினூடாக யாழ். மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துவரப்பட்டன.

நாட்டில் தற்போது நிலவிவரும் சமாதானத்திற்கு இத்துறைமுகத்தின் புனரமைப்புப் பணிகள் வலுவூட்டுவதாக அமையும் என்பதில் ஐயமில்லை என்றும் தெரிவித்தார்.

# நூலகம் சென்றால் பால் குடிக்கலாம்

கொழும்பு பொது நூலகத்துக்கு சென்று நாளாந்தம் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு இலவச பால் பைக்கற் வழங்க தீர்மானித்துள்ளதாக கொழும்பு மாநகரசபை அறிவித்துள்ளது.

நாளாந்தம் 200 தொடக்கம் 300 வரையிலான மாணவர்கள் கொழும்பு பொது நூலகத்தில் வந்து தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் இவர்களில் சிலர் தொலைவில் இருந்து வருபவர்கள் எனவும் கொழும்பு மாநகர சபையின் விசேட ஆணையாளர் ஓமர் காமில் தெரிவித்துள்ளார்.

மேலும் மாணவர்கள் நூலகத்துக்குள் நுழையும் போது பால் பைக்கற்றுக்களை வழங்க தீர்மானித்துள்ளதாகவும் இத்திட்டத்துக்கு சில தனியார் பால் உற்பத்தி நிறுவனங்களும் உதவி புரியும் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ். பாடசாலைகளுக்கு ஆய்வுகூட உபகரணங்கள்

(அச்சுவேலி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் விஞ்ஞான ஆய்வுகூடங்களில் நிலவிவரும் விஞ்ஞான உபகரண பற்றாக்குறை, இரசாயனப் பொருட்களின் பற்றாக்குறை போன்றவற்றை பூர்த்தி செய்யும் வகையில் இவ்வாண்டுக்கான முதலாம் தொகுதி விஞ்ஞான உபகரணப் பொருட்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விஞ்ஞான ஆய்வுகூட உபகரணப் பொருட்கள் பாடசாலைகளின் தேவைகள் மற்றும் கோரல்களிற்கமைய இன்னும் சில வாரங்களில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இவ்வாறு அவை பகிர்ந்தளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆய்வுகூட செயற்பாடுகள் மேலும் வினைத்திறன் மிக்கதாக அமையக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (03)

## தேசிய மட்ட உதைபந்தாட்டம்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பாடசாலை மட்ட 15 வயது பிரிவு தேசிய மட்ட போட்டிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 23, 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதால் மேற்படி போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகளுக்கிடையிலான யாழ். மாவட்ட போட்டிகள் ஆகஸ்ட் மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளது என சம்மேளன இணைப்பாளர் பேட்டி பனிஸ்ரர் தெரிவித்துள்ளார். போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலை அணிகள் இணைப்பாளருடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

## யாழ். புற்றுநோயாளர்...

.சுமார் 130 மில்லியன் ரூபா வரை திரட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்றலில் இருந்து தமது பயணத்தை ஆரம்பித்த அணியினர் குழாமில் இலங்கைக் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்காராவும் இணைந்து கொண்டு தமது பயணத்தை மேற்கொண்டார்.

வழி நெடுகிலும் பொது மக்கள் நின்று தமது ஆதரவைத் தெரிவித்ததுடன் நடை பாதை அணியினருக்கு மலர் மாலைகள் அணிவித்து கௌரவித்தும் உள்ளார்கள்.

நேற்று நடைபாதையாக புத்தூர் சந்தியை வந்தடைந்த போது மக்கள் நிறை குடம்வைத்து, மலர்மாலைகள் அணிவித்தும் சிற்றுண்டிகள், குளிர்பானங்கள் வழங்கியும் நடை பாதை அணியினரை வரவேற்று உற்சாகமளித்தார்கள். இன்று அதிகாலையில் வல்லையில் இருந்து புறப்பட்டு பருத்தித்துறை வெளிச்சவீட்டை அடைவார்கள்.

இன்று தமது இலக்கை அடைந்த பின்னர் நடை பாதைப் பயணத்தில் தொடர்ந்து கலந்து கொண்டவர்கள், யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெறும் நிகழ்வில் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் இளைஞர் அணியின் தலைவருமான நாமல் ராஜபக்ஷவும் கலந்து கொள்ளவுள்ளார்.

பிற்பகல் 4.00 மணிக்கு தெல்லிப்பளை புற்று நோய் வைத்தியசாலையில் இடம் பெறும் புற்று நோயாளர்களுக்கான விடுதி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்விலும் நடை பாதை அணியினர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

## தந்தை...

தரத்திலான ஒரு அரசியல் தீர்வை வழங்கும் ஒரு கடப்பாட்டிற்குள் இந்தியாவையும், சர்வ தேசத்தையும் ஆளாக்கிவிட்டன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈ.பி.டி.பி...


இத்தாக்குதலை நடாத்தியுள்ளதுடன் இம்மூவரையும் ஊர் மக்கள் பிடித்து தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இத்தாக்குதலின் போது படுகாயமடைந்துள்ள சந்திரபாலன் சிகிச்சைக்காக தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு ஈ.பி.டி.பி சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்ட தயாபாலன் என்பவரது சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலம்பெயர் தேசத்தில்...



டென்மார்க்கில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் Skjern மாநகரில் தமிழ் மக்களின் கலை, கலாச்சரத்தை வளர்க்கும் நோக்கோடு உருவாக்கப்பெற்ற 'டெனிஷ் தமிழ் தோழமை ஒன்றியம்' தனது வெள்ளி விழாவை (25 ஆவது ஆண்டு) 11.06.2011 அன்று மிகவும் எழுச்சியாக கொண்டாடியது. அவ்விழாவின் போது...




பாரீஸில் Arceuil (RER B LAPLACE) எனுமிடத்தில் தமிழ்மொழிப் பொதுத்தேர்வு யூன் மாதம் நடாத்தப்பட்டது. அங்குள்ள பிரெஞ்சு அரசின் கல்வித் திணைக்களத்தின் பல அடுக்குமாடிகள் கொண்ட Maison des Examen கட்டடத்தில் 16 தேர்வு மண்டபங்களில் தமிழ்மொழிப் பொதுத்தேர்வு நடைபெற்றது. சுமார் நான்காயிரம் மாணவர்கள் பாரீஸ் மற்றும் புறநகர்ப் பகுதிகளிலிருந்து கலந்து கொண்டனர். பல மாநகரசபைகள் தமிழ்மொழிப் பொதுத்தேர்விற்காகப் பேருந்து வசதிகளும் செய்து கொடுத்திருந்தன.



கனடாவில் வசிக்கும் நீர்வேலி மக்கள் நடத்திய ஒன்றுகூடல் மற்றும் விளையாட்டுப் போட்டி என்பன அண்மையில் இடம்பெற்றன. இதன்போது நீர்வேலி நலன்புரிச் சங்கத்திற்கு புதிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. தலைவர் - பி.ஜெகன், செயலாளர் - ஜீவா கோபாலசிங்கம், பொருளாளர் - எஸ்.பிறைசூடி

## செய்திப்பரணி

எம்மண்ணில் வாழ்ந்திட எமகண்டம் என்பாராம்
தம்வாக்கை இனவாதம் தான்பேசிட - அம்மட்டும்
அள்ளிக் கொடுத்திட்டு அழகாக பிறதேசங்கள்
துள்ளித் திரிந்தே துவள்!



# தனியார் வாகனங்களுக்கு பஸ் நிலையத்தில் தடை

வவுனியா பஸ் நிலையத்திற்குள் தனியார் வாகனங்கள் காலை 7 மணிமுதல் மாலை 6 வரை நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது

பொலிஸாரும் நகர சபையினரும் இணைந்து எடுத்துக் கொண்ட இந்த அறிவிப்பு விளம்பரப் பலகை மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தடையை மீறி நுழையும் வாகனச் சாரதிகள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பஸ் நிலையப் பகுதிக்குள் வாகன நெருக்கடியை கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்தத் திட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (39)

# போரில் வெற்றிபெற கோத்தபாயவோ கோழைகளான தளபதிகளோ காரணமல்ல



(கொழும்பு)

புலிகளுடனான போரில் அரச படைகள் வெற்றி பெறுவதற்கு இந்த நாட்டின் வளங்களை உறிஞ்சிக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகளைப் பின்பற்றும் கோழைத்தனமான இராணுவத் தளபதிகளோ அல்லது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷவோ காரணமல்ல என சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

வெள்ளைக்கொடி வழக்குக்காக நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டபோதே இதனை அவர் தெரிவித்தார்.

போர் வீரர்களின் அர்ப்பணிப்பும், பொது மக்கள் வழங்கிய ஆதரவும்தான் புலிகளுடனான போரில் வெற்றிபெற்றமைக்கான காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார். ஆறாயிரம் படையினர் போரின்போது தமது உயிர்களை அர்ப்பணித்தார்கள்.

அதேபோல் இந்த நடவடிக் கைகளின் போது அதே அளவு எண்ணிக்கையான படையினர் நிரந்தரமாக உடல் உறுப்புக்களை இழந்திருக்கின்றார்கள் எனவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

# டேவிட் வீதியில் விபத்து இளைஞர் ஒருவர் படுகாயம்

(குருநகர்)

குருநகர் டேவிட் வீதியில் நின்ற இளைஞன் மீது ஆட்டோ மோதியதில் விபத்து சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை 4.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சுண்டுக்குளியைச் சேர்ந்த த.தயாபரன் (வயது-26) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் வீதியில் அவரது மாமனாருடன் பேசிக்கொண்டு நின்றபோது அவ் வீதியால் சென்ற ஆட்டோ மோதிவிட்டுத் தப்பி ஓடிவிட்டதாகத் தெரியவருகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்)

# காணி உரிமம் உறுதிப்படுத்தல் யாழ்.மாவட்டத்தில் புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

காணி அபிவிருத்தி அமைச்சினால் அமுல் செய்யப்படுகின்ற காணி உரித்துப் பதிவுக்கான தேசிய நிகழ்ச்சித் திட்டமான "பிம்சவிய" (நிலசக்தி) வேலைத்திட்டம் தற்போது யாழ். மாவட்டத்திலும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு நேற்றைய தினம் நல்லூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரீ.அசோக்கா பீரிஸ் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டு இத்திட்டம் தொடர்பாக, கிராம அலுவலர்கள் மற்றும் வெளிக்கள அலுவலர்களுக்கு விளக்கங்களை வழங்கினர்.

இத்திட்டத்தின்படி, காணிக் கொடுக்கல் வாங்கல்களின் போது இதுவரை காலமும் பயன்படுத்தி வந்த காணி உறுதி முறைக்குப் பதிலாக காணி உரித்தைப் பதிவு செய்யும் புதிய தொரு முறையை அறிமுகம் செய்யும் நோக்குடன் 'பிம்சவிய' திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த முறையின் கீழ், இதுவரை காலமும் அளக்கப்படாதிருக்கும் காணிகளை அளந்து, அக்காணிகளின் உரித்தை உறுதி செய்து கொண்ட பின்னர் பூரண அரசாங்க உத்தரவாதமுடைய உரித்துச் சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படவுள்ளது.

இவ் உரித்துச் சான்றிதழானது, நம்பகத் தன்மையுடையதாக இருப்பதுடன், காணி மீது வங்கிக் கடன் பெற்றுக்கொள்வதும் இலகுவானதாகவும் அமைவதோடு, போலியாகத் தயாரிக்கப்பட்ட காணி உறுதிகள் மற்றும் காணிப்பிணக்குகள், காணி மோசடிகளில் ஈடுபடுவோர் குற்றச் செயல்களில் ஈடுபடுவதும் தவிர்க்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் காணிப்பதிவு அலுவலகங்கள், மாவட்ட, பிரதேச நில அளவை அலுவலகங்கள், பிம்சவிய வெளிக்கள அலுவலகங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (26)

# யாழ்.பல்கலை வெளிவாரி மாணவர்கள் 300 பேருக்கு கலைமாணிப் பட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்பு அலகினால் நடத்தப்பட்ட கலைமாணி இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து கலைமாணிப் பட்டம் பெறுவோர் பட்டியல் வெளியாகியுள்ளது.

இம்முறை 300 மாணவர்கள் கலைமாணிப் பட்டம் பெறுவதுடன், இவர்களில், 2 மாணவர்கள் இரண்டாம் தரம் மேற்பிரிவிலும், 18 மாணவர்கள் இரண்டாம் தரம் கீழ்ப்பிரிவிலும், 280 மாணவர்கள் சாதாரண சித்தியிலும் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்புகொண்டு பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# சட்டவிரோத மதுபானம் சூத்திரதாரிக்கு தண்டம்

அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்து வந்த நபர் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றத்தால் 10 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்.அரியாலைப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது குறித்த நபரை யாழ்.பொலிஸார் கைது செய்து யாழ்.நீதிமன்ற நிதிபதி ஆ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.இந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி குற்றவாளிக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், செலுத்தத் தவறின் இரண்டு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமெனத் தீர்ப்பளித்தார். (எஸ்)

# சங்கிலியன் சிலை திறப்பு நல்லூரில் அடுத்த வாரம்

## யாழ்.மாநகர சபை ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

நல்லூர் முத்திரைச் சந்தியில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட சங்கிலிய மன்னனின் உருவச்சிலை திறப்பு விழா எதிர்வரும் 04 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இது தொடர்பான கூட்டமொன்று நேற்று யாழ்.மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. இங்கு முதல்வர் கருத்துத் தெரிவிக்கையில்,

நான் சபை உறுப்பினர்களுக்கு அறிவிக்காமல் எந்தத் தீர்மானமும் எடுப்பதில்லை. எனினும் சிலை அமைப்புத் தொர்பாக சில அரசியல்வாதிகள், ஊடகங்கள், இணையத்தளங்கள் இவ் விடயத்தை விசமத்தனமாகப் பிரச்சாரம் செய்தனர்.

நல்ல எண்ணத்துடன் நாம் புனரமைப்புச் செய்ய நினைத்த இத்திட்டத்தை, தேர்தல் காலங்களில் தமது பிரச்சாரத்திற்காக தவறாகப் பயன்படுத்தியமை கண்டிக்கத்தக்கது என்றார்.

மேலும், எந்தவித கருத்து வேறுபாடுகளுமின்றி எல்லோரும் ஒன்றிணைந்து யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னனான சங்கிலிய மன்னனின் சிலை திறப்பிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

சிலை திறப்பு நிகழ்விற்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, மதத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமூகப் பெரியார்கள், கல்விமான்கள், பொதுமக்கள் அனைவரையும் அழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எஸ்)


# எட்டாவது ஆண்டு நினைவாக..!



பிறப்பு : 14-09-1974 (யாழில்)

இறப்பு : 27-07-2003 (பிரான்சில்)

## கிளரன்ஸ் கோமஸ் (ராஜா)

அன்பு மகனே கிளரன்ஸ்
ஆண்டுகள் எட்டும்
ஓடி மறைந்தனவா?
இன்றைக்கும் நீயெங்கள்
இதயங்களில் இருந்து
மறையவில்லை ஐயா!
நேற்றுத்தான் போலிருக்கிறது.
நிகழ்ந்துவிட்ட எல்லாமே!
ஆயினும் நீ எங்களை
விட்டுப் பிரிந்ததும்
உண்மையே ஐயா!
எட்டாத இடத்திற்கு
நீ சென்றது எட்டாண்டுகள்
என்றாலும் எங்கள்
இதயங்களில் என்றென்றும்
வாழ்கிறாய் மகனே!
நீங்காத உன் நினைவுகளுடன்
பெற்றோர்.
தந்தை : தியோடர் கோமஸ்
தாய் : ஆரோக்கியசீலி கோமஸ்



இவரது ஆத்ம சாந்திக்கான இரங்கல் திருப்பலி இன்று 27.07.2011 புதன்கிழமை காலை 6 மணிக்கு யாழ் அடைக்கல அன்னை (ஓ.எல்.ஆர்) ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

நிரந்தர முகவரி:–
மவுண்கார் மேல்வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

தற்காலிக முகவரி:–
எடிசன் தெரு,
பிளாட் நம்பர் – 11
சேசாயி நகர்,
கே.கே.நகர், திருச்சி – 21.

(C/844)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.